1905

செங்குந்த மித்திரன்

தொகுதி 2 மலர் ~~க~~ கா 6

இ

ஆனி

1928-29.

JL
Y592.cm211,N27CH
N28.2.6
129802.

05

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி,

OFFICE OF THE REGISTRAR OF ... No. ... 25 SEP 19.. MADRAS

தொகுதி - உ] | விபவ௵ - ஆனி௴ | [பகுதி - கூ

உள்ளடக்கம்.


| | | |
|---|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | ... ... | உ௱க |
| ஆராய்ச்சிப் பகுதி | ... ... | உ௱௰ |
| பொது விஷயங்கள் | ... ... | உ௱கூ |
| மாதர் பகுதி | ... ... | உ௱கூ |
| செங்குந்தர் கிளர்ச்சி | ... ... | உ௱கஎ |
| பாமாலைப் பகுதி | ... ... | உ௱உக |
| செங்குந்த சீமான்களுக்கு 2 விண்ணப்பங்கள். | | உ௱௩௰ |
| செங்குந்தர் பஞ்சாங்கம் | ... ... | உ௱௩௰உ |


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

Registered No. 1514.

124802.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினரும் சீரடையவேண்டிச் சங்கங்கள் பல நிறுவி வெகு ஊக்கத்துடன் உழைத்து வரும் இக்காலத்தில் பண்டைப் புகழ்பெற்ற செங்குந்த குல மக்கள் மட்டும் இது விஷயத்தில் யாதொரு ஊக்கமுமின்றிக் கிடப்பதையுன்னி, நமது கு முன்னேற்றத்திற்கென உழைக்கச் சென்னையில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என ஒ சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மகாஜனசங்கம் நமது குலமக்கள் கல்வி, ஒழுக்க செல்வம், அந்தஸ்து முதலியவற்றில் மேன்மை யடையும் வழியைத் தேடிவருகின்றது.

குலத்தொண்டு செய்துவருவதே இம்மகாஜனசங்கத்தின் நோக்கமாதலால் அது நிறை வேறத் தென்னிந்தியாவிலுள்ள செங்குந்தர் ஒவ்வொருவருடைய ஒத்துழைப்பும் உதவியும் ஆ ரவும் அவசியமாகையால், மகாஜன சங்கத்தார் தற்போது செங்குந்தர் வதியும் கிராமங்க தோறும் பிரசார வேலைசெய்து வருகின்றனர். பிரசாரகர்களைத் தங்கள் கிராமங்களுக்கு வ வழைக்க விரும்பும் குலாபிமானிகள் சங்க அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவார்களாக.

---

**முதல்தரமான வேலைப்பாடு!** **நம்பிக்கையான வேலைக்காரர்கள்!**

## நகைகள்! நகைகள்!

குறைந்த சார்ஜுகள்.

நாங்கள் சீமைக்கமலங்களிலும், இதர கற்களிலும் குறைந்த கூலியில் கண்க கவரும்படியான விதமாய் வேலைகள் செய்து கொடுக்கிறோம். தவிர நாங்களே உங்கள் மனதிற் பிடித்த நல்ல கற்களையும் வாங்கிக்கொடுக்கிறோம். இதர பொன் வெள்ளிவேலைகளும் மெ களும், என்கிரேவிங் வேலையும் செய்து குறித்த காலம் தவறாமல் கொடுக்கின்றோம். எங் டம் ஒருதரம் ஆர்டர் செய்து பாருங்கள். ஒருமுறை ஒரு சிறிய ஆர்டர் கொடுத்துப் பரீக்ஷித் பாருங்கள்.

**ஆர்டர் வாங்கிக்கொள்ளும் நேரம் காலை 7-மணி முதல் 8-30-மணிவரையில்.**

ராஜரத்தினம் பிரதர்ஸ்,

**நகைவேலைக்காரர்கள், நெ. 8, இரண்டாவது தெரு, புதுப்பேட்டை, மதரா**

---

## இரகஸ்யம்

ஒரு யோகீஸ்வரரால் அனுக்கிரகம் செய்யப்பட்டது அநேகம் பிரபுக்கள் பரீட் செய்து நற்காட்சி பத்திரங்களும் அளித்திருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் அதிக பிரயோஜ த்தைத் தரத்தக்கதாதலால் இது உலோகோபகாரமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது தளர் தேகத்தைக் கெட்டிப்படுத்தி, நரம்புகளுக்கு வலுவேற்றித் தேகபுஷ்டி கை, கால், இடுப்பு, மார் முதலிய உறுப்புகளின் வலிவு, சுறுசுறுப்பு, சந்தான உற்பத்தி, பேரானந்தம், மனோதைரியம் மு லியவைகளை உண்டுபடுத்தி, மெலிந்து தளர்ந்துபோன வயோதிகரும் வாலிபருடைய சகல சுக களையும் அனுபவிக்கச் செய்யும் மேகவெட்டை, வாய்வு, மலபந்தம், பசியின்மை முதலிய வி திகளை நீக்கி, தேகாரோக்கியத்தை உண்டாக்கிவிடும். ஒரே வேளை மருந்தில் சொர்பனஸ்கலித துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கித் தாதுவை வஜ்ஜிரத்தைப்போல் கெட்டிப்படுத்தி, நரம் களுக்கு முறுக்கேற்றி ரகலிய இன்பத்தை உண்டாக்கி விடுமெனபது உண்மை. இதற்குப் பத்தி மில்லை. புட்டி 1-க்கு இரண்டு ரூபாய் மூன்று புட்டி வாங்கினால் பால் செலவு கிடையா இவ்வற்புத சஞ்சீவியின் பெயர் கற்பகவிந்தாதி லேகியம்.

வேண்டுவோர்,

மானேஜர், கற்பக மெடிகல் ஹால்,

**சுவாமிமலை போஸ்ட், S. இந்தியா என்னும் விலாசத்திற்கு எழுதவு**

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

| தொகுதி - உ | விபவஹூ - ஆனிமீ | பகுதி - கூ |
|---|---|---|

முருகன் துணை.

திருச்சிற்றம்பலம்.

**சங்கநிதி பதுமநிதி யிரண்டுந்தந்து தரணியோடு வானாளத் தருவரேனும்**
**மங்குவா ரவர்செல்வ மதிப்போமல்லோ மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்**
**அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயாகி யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்**
**கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே.**

## பத்திரிகாசிரியர் முன்னுரை

**ஜாதீய மகாநாடுகளைப்பற்றி**
**முதல் மந்திரி டாக்டர் சுப்பாராயனின் அபிப்பிராயம்**

வேளாள வாலிபர் முதலாவது மகாநாடு சென்றமாதம் கொடுமுடியில நடைபெற்றது. மகாநாட்டைத் திறந்து வைக்கும் பொருட்டுக் கனம் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் விஜயம் செய்திருந்தார். மகாநாட்டிற்கு ஏராளமான கூட்டம் வந்திருந்தது. டாக்டர் சுப்பராயனுக்கு வாலிப மகாநாட்டு உபசரணைக் கமிட்டியின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரம் சமர்ப்பிககப்பட்டது. டாக்டர் சுப்பராயன் அதைப் பெற்றுக் கொண்டு கரகோஷத்தினிடையே எழுந்து மகா நாட்டைத் திறந்து வைப்பதற்குமுன் பின்வரும் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதைச் செங்குந்தர்களாகிய நாமும் நமது மகாநாட்டைக் கூட்ட எண்ணும் இச்சமயம் கவனிக்கவேண்டிய தவசியமாதலின் ஈண்டு வெளியிடுகின்றோம் :—

**"சிலர் ஜாதி மகாநாடு கூட்டுவதில் யாதொரு விதமான பிரயோஜனமுமில்லை என்று நினைக்**கிறார்கள். அது சரியான அபிப்பிராயமென எனக்குத் தோன்றவில்லை. எனது அபிப்பிராயத்தில் ஜாதி மகாநாடு கூட்டுவதில் பல நன்மைகள் ஏற்படுமெனத் தோன்றுகிறது. இப்படிக் கூட்டங்கள் கூடுவதினால் ஒருவருக்கொருவர் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளுவதற்கும் சமூகம் முன்னேற்றமடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்கும் அனுகூலமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. இதனால் நன்மை ஏற்படுமென்கிற நம்பிக்கை என்னிடம் ஏற்பட்டதின் நிமித்தம் தான் நான் இம்மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு ஒப்புக்கொண்டேன்.

"கூடியிருக்கும் இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் என்னுடைய முதல் செய்தியானது கதரேயாகும். கொங்கு வேளாளரிடம் கதர் உற்பத்தி செய்வதானது தொன்று தொட்டு ஏற்பட்ட வேலையேயாகும். அப்படி இருக்கும் வேளாளர்கள் ஏன் கதரைச் சரிவர ஆதரிக்கவில்லை. ஒவ்வொரு கொங்கு வேளாளரும் கதர் கட்டுவது தங்கள் கடமை எனக் கருதி

வேண்டும். இந்தியதேசம் வெளிநாடுகளிலிருந்து துணிகளை இறக்குமதி செய்வதற்குமுன், வேளாள ஸ்திரீகளால் நூல் நூற்கப்பட்டு அதிலிருந்து வேஷ்டி புடவை முதலியவைகள் கைத்தறியினால் கிராமாந்தரங்களில் தயார் செய்யப்பட்டு வந்தன. (ரு-ம் இதழ் ௱௭௱-ம் பக்கம் பார்க்க.) கதர் நூல்களும் சொந்தத் தோட்டங்களில் விளைந்த பருத்தியைக் கொண்டே செய்யப்பட்டு வந்தன. அயல் நாட்டுத் துணிக்கு நமது பணத்தைக் கொடுக்கக்கூடாதெனச் சொல்லும் கக்ஷியில் நானும் ஒருவன். அதனால் இந்தியாவின் பணம் அநியாயமாய் அயல் நாட்டுக்குப் போய்விடுகிறது. மகாத்மா காந்தி கதருக்காகப் படும்பாடு உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆகையால் நீங்கள் ஒவ்வொருவரும் கதரைத் தவிர வேறு ஆடைகள் ஒன்றும் அணியக்கூடாதெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்............

"கோயமுத்தூர் ஜில்லா போர்டில் 24 மெம்பர்கள் வேளாளர்களாயிருந்தும் ஒற்றுமையின்மையால் கக்ஷிப் பிரதிகக்ஷிகள் தோன்றி நமது பலத்தைக் குறைப்பது நமக்கு அவமானத்தைக் கொடுக்கிறது............

"வேளாள வாலிபச் சிறுவர்கள் ஜாதிமுன்னேற்றத்திற்காகப் பாடுபட முன்வரவேண்டும். அப்படி வந்தால் தான் ஒற்றுமை ஏற்படும். சிறுவர்கள் அவசரப்படாமலும், வேறு ஜாதியாரைக் கெடுத்துத் தாங்கள் முன்வரவேண்டுமென்கிற கெட்ட அபிப்பிராயம் வைத்துக் கொள்ளாமலும், சகல ஜாதியாருடனும் ஒற்றுமையுடனிருந்தும் தங்கள் காரியத்தில் ஜயம்பெறவேண்டியது அவசியம். பல இடங்களிலும் மாணவர்களுக்குச் சாப்பாட்டு வசதி ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய காரியங்களுக்கு நமது முக்கியஸ்தர்கள் அந்தந்தவிடங்களில் வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பது அவர்கள் கடமையாகும்."

இந்த மாதம் அருப்புக்கோட்டையில் கூடிய நாடார் மகாநாட்டில் மேற்படி மந்திரியார் கீழ் வருமாறு பிரசங்கஞ் செய்துள்ளார் :—

"ஜாதீய மகாநாடுகளின் வேலை என்ன? அநேக தடவைகளில் இத்தகைய ஜாதீய மகாநாடுகள் பல ஜாதிகளுக்குள் வேற்றுமையைக் கிளப்பிவிடுகின்றன வென்றும், தெசீயத்திற்கு எதிராக இருப்பவைகள் என்றும், கண்டிக்கப்பட்டிருக்கின்றன. இக்கண்டனங்கள் சரியா? நமது தேசத்திலுள்ள எல்லா ஜாதிகளும் இந்தியர் என்ற ஓரே ஜனசமுகம் போல் ஒன்றுகூடி ஆலோசித்துக் காரியம் நடத்தும் நாளைக் காண மிக சந்தோஷப்படுவதற்கு என்னைக்காட்டிலும் வேறொருவர் இருக்க மாட்டார். ஏனென்றால், 'ஜனசமுகம்' என்பது தற்போதுள்ள மாதிரி குறுகிய நோக்கமுடையவர்களின் எண்ணப்படி ஒரு ஜாதியாரை மட்டும் குறிக்காது. உண்மையில் அது எல்லா ஜாதிகளையும் குறிக்கும். ஆகவே, இந்தக் குறுகிய நோக்கம் அறவே ஒழிந்து இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியார்களும் தேசீய ஒற்றுமையை யுணர்ந்து அதனால் நம் தேசீய நோக்கம் நிறைவேறும்படியான நாளைக் காணுவதற்கு நான் சந்தோஷப்படுவேன். ஆனால், இந்த கண்டனங்களுக்கிடையே அவைகளை எதிர்த்துத் தற்காலநிலைமையை நன்கறிந்து இந்த ஜாதீய மகாநாடுகளென்று சொல்லப்படுபவைகள் கெடுதி கலந்தவைகள் என்பதல்லாது, ஒரு தனி ஜாதியாருக்கு மட்டுமல்லாமல் தேசத்துக்கும் மிக முக்கிய நன்மைகள் தரக்கூடியவைகள் தான் என்று சொல்ல நான் தயங்க மாட்டேன். கொஞ்ச நாளைக்கு முன் இத்தகைய ஒரு ஜாதீய மகாநாட்டில் பேசிய பொழுது இத்தகைய மகாநாடுகளின் உயர்ந்த தேசீய நோக்கத்தைப்பற்றி அழுத்தமாகச் சொல்லியிருக்கிறேன்.

"ஏனென்றால், பல வகுப்பினர்கள் கூடித்தான் ஒரு தேசத்தினராகி யிருக்கிறார்களென்று நாம் நன்கறிந்ததே. தேசத்தினரின் ஒவ்வொரு பகுதியும் முன்னேற்றமடையாதிருந்தால் எப்படி ஒரு தேசத்தினர் முன்னேற முடியும்? ஒரு தேசத்தினர் பலவிதமான அவயவங்களுடன் கூடிய மனித தேகத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றனர். தேகத்தின் பல பாகங்கள் ஆரோக்கியமா யிராமல் எப்படி தேகம் ஆரோக்கியமாயிருக்க முடியும்? ஒரு சரியான பயில்வானின் தேகத்தின் ஒவ்வொரு அவயவமும் நன்கு பலம் பெற்றுத் தேர்ச்சி யடைந்திருக்கின்றது. அதுபோலவே ஒரு தேசத்தினரும். ஆகவே, ஒவ்வொரு ஜாதியாரும் தனிப்பட எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைவது தேசீய அபிவிர்த்திக்கு அவசியமில்லையா? இந்த நிலைமையில் ஒவ்வொரு ஜாதியாரும் தங்களை உயர்த்திக்கொள்வதிலும் தன்மதிப்பைத் தங்களுக்குத் தேடிகொள்வதிலும் செய்யும் முயற்சிகளை தேச நன்மையை உத்தேசித்து ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துடையவனாயிருக்கிறேன்.

"தேசீய நோக்கத்தைக் கருதாவிடினும் ஜாதீய அபிவிருத்திக்கு இத்தகைய வருஷாந்திர மகாநாடுகள் கூடுவது எவ்வளவு தேவையாயிருக்கிறதென்பதைச் சிறிது நேரம் யோசியுங்கள். சமுதாய விஷயத்தில் ஒவ்வொரு ஜாதியாருக்கும் அநேக துன்பங்களும் கஷ்டங்களுமிருக்கின்றன. அவைகளை எதிர்த்து ஜெயிக்க வேண்டியது தலைவர்களுடைய கடமையாகும். அவைகள் இத்தகைய மகாநாடுகளில் ஆலோசித்துக் காரியங்களை எந்த வழியில் நடத்துவது என்ற முடிவுக்கு வருவதாலேயே சாதிக்க முடியும். அநேக சமுதாய விஷயங்களும் மற்ற கஷ்டங்களும் நமது மனதைக் கவருகின்றன. இதுபோலொத்த மகாநாட்டின் உறத்த தீர்மானங்களும் ஒற்றுமையான நடவடிக்கையுமே அவைகளை நிவர்த்தி செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன. அதோடு சமூகம் ஒற்றுமைபடையக்கூடும். சமூக ஒற்றுமையால் சமுகத்தேவைகளும் குறைகளும் நிவர்த்தியாகின்றன. ஒற்றுமையல்லாது ஜெயம் அடைய முடியாது. ஒன்று சேர்ந்து செய்தலே ஒற்றுமையின் முக்கிய தத்துவமாகும். மற்றும், இம்மாதிரி மகாநாடுகள் நீங்கள் இதுவரை எவ்வளவு முன்னேற்றமடைந்திருக்கிறீர்கள் என்பதையும் முந்திய மகா நாடுகளில் நிறைவேறிய தீர்மானங்களைக் கொண்டு எவ்வளவு தூரம் அவைகளை அநுஷ்டித்திருக்கிறீர்கள் என்பதையும் கவனிக்க உங்களுக்கு உதவியளிக்கும். தோல்விகள் ஏற்படலாம். கஷ்டங்களை அநுபவிக்க வேண்டியிருக்கும். இம்மகாநாடுகள், காரியங்களைச் சாதிக்க மற்ற வழிகளையும், கஷ்டங்களுக்கு உதவியையும் அளிக்க வல்லவைகள். இந்த மகா நாடுகளில் வெவ்வேறு பாகங்களிலுள்ள உங்கள் ஜாதியின் அங்கத்தினர்கள் எல்லோரும் ஒன்றுகூடுகிறார்கள். இப்படி ஒன்றுகூடி யிருப்பதானது கடைசியாக வெற்றியைத் தரக்கூடிய காரியங்களையும் எண்ணங்களையும் ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்வதற்கேதுவாகிறது. இம் மகாநாடுகளிலே நீங்கள் உங்கள் ஜாதித் தலைவர்களை நேருக்கு நேராகச் சந்திக்கிறீர்கள். தலைவர்கள் தங்களுடைய முந்திய வேலைகளையும் பின் செய்யவேண்டிய கரரியங்களையும் பற்றி உங்களுடன் கலந்து ஆலோசிக்கிறார்கள். இத்தகைய மகாநாடுகளில் தான் ஒவ்வொரு ஜாதியாரும் ஒன்று சேர்ந்து தேச நிர்வாகத்தின் எல்லாப் பிரிவுகளிலும் தங்களுக்குள்ள உரிமையை வற்புறுத்தவும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சரியாகவும் தகுந்த மரியாதையுடனும் நடத்தவும், தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும் ஏதுவாயிருக்கிறது.

குறிப்பு :—யாம் சென்றமாதம் தென்னாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த சமயம் எமக்குப் பல சௌகரியங்களையும் செய்து வைத்து விருந்தளித்து அன்புடன் உபசரித்த நம் குலப் பிரமுகர்களுக்கு எமது நன்றியை இப்பத்திரிகை வாயிலாகத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். அவர்கள் அன்பிற்குப் பாத்திராரகும் வண்ணம் யாம் குலத்தொண்டில் முயற்சி தளராதிருக்கும் வண்ணம் இறைவன் கருணை புரிவாராக.

இச்சுற்றுப் பிரயாணத்தில் யாம் ஓய்வின்றி ஒன்றரை மாதகாலம் வேற்றூர்கள் பலவற்றுள் சிறிது சிறிது காலமே தாமதித்துச் செல்ல நேரிட்டதால் நமது 'மித்திரன்' இம்மாதம் பத்து நாள் கழித்துவருகின்றது. இத்தாமதத்திற்கு எம்மை நமது சந்தாநேயர்கள் மன்னித் தருளுமாறு வேண்டுகின்றோம்.

ம. ச.



## ஆராய்ச்சிப் பகுதி

### செங்குந்தருஞ் சிவபூடணமும்

செங்குந்தகுல சிவநேசச் செல்வர்காள் !

சேர, சோழ, பாண்டியரென்னும் பண்டைக் காலத்து மூவேந்தராலுங்கொண்டாடப் பெற்ற கஞ்சிரிய குலத்தார்களுக்கும், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாமிறைவனருட் பூடணமாய் விளங்கும் விபூதி உருத்திராக்கத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும், அவற்றை நங்குலத்தோர் அணியக் கடமைப் பட்டுள்ளோர் என்னும் உரிமையைப் பற்றியும், எதுகாரணம் பற்றி இவர்களணிய வேண்டுவது அவசியம் என்பது பற்றியும் நன்கு ஆராய்ச்சி செய்தலே நாம் இங்கு எடுத்துக்கொண்ட விஷயம்.

செங்குந்தர் என்னும் பதத்திற்குச் செம்மையாகிய ஈட்டியென்னும் குந்தப்படையை யுடையவர்கள் : அதாவது அத்தகைய குந்தத்தினையுடையவர்களின் கால்வழிவந்தோர் என்றுவது; செம்—பகைவர்களது இரத்தம் தோய்தலினால் முனை சிவப்பேறப்பெற்ற, குந்தர்—குந்தம் என்னும் ஈட்டிப்படையையுடையவர்கள்: அதாவது, குந்தாயுதத்தை முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானால் சூரசம்மார நிமித்தம் அளிக்கப்பெற்ற நவவீரர் நன்மரபி லுதித்தோரென்றுவது பொருள் கொள்ளக் கிடைக்கின்றமையின், செங்குந்தர் என்னும் பதத்திற்குச் சிவன் கால்வழித்தோன்றியவர்களாலாகிய நவவீரர் மரபில் வந்தோரான செங்குந்த முதலியாரென்னுஞ் சீரியநாமம்பெற்ற கைக்கோள முதலிகள் (கைக்கொள்வர் — "ஒழுக்கத்தின் கொள்கையையுடையோர்") எனப்பொருள் கோடலே சாலச் சிறப்புடைத்தாம். இனி சிவபூடணம் என்பதில் சிவம் என்னுஞ் சொல்லானது நிரதிசய இன்பமாகிய மங்கலம் என்னும் பொருளில் அத்தகைய நிரதிசய இன்பமாகிய மங்கலத்தைக் கொடுப்பவனே சிவன் என்னும் பதிப்பொருள் (மோக்ஷதாதா) என்று எல்லாம் வல்ல இறைவனும் சிவனை யுணர்த்தும் பூடணம்—ஆபரணம் என்றாய், அத்தகைய இறைவன் ஆன்மகோடிகளின் மலங்கெட அணியும் பூடணமாய் விளங்கும் விபூதி உருத்திராக்கங்களையே குறிக்கும். இவைகளிரண்டும் இறைவனிடந் திருந்தே தோன்றி இலறவனருட் சத்தி பதிதலால் சிவபூடணமென்று ஆன்றோர் கூறுவர். "உம்" என்பது அளவை உண்மையின் பாற்பட்டு எண்ணிக்கையை உணர்த்தும் இடைச்சொல் எனவே. செங்குந்தர்களென்னுஞ் சிறப்பினை வாய்ந்த நங்குலத்தார்களுக்கும் சிவபூடணங்களாகிய விபூதி உருத்திராக்கத்திற்கு முள்ள பெருமை, குணம், பயன், ஏன் இவர்கள் அணியவேண்டுமென்பது முதலியவைகளே நம் வியாசத்தின் ஆராய்ச்சிக்குரிய முக்கிய அம்சங்களாம்.

இனிச் செங்குந்தர்களென்பவர் யார், இவர் தோன்றிய வரலாறு யாது, இவர் பெருமை என்ன, மக்கட் பிறப்பிலிவர்கள் எவ்வாறுயர்ந்தார்கள் என்பது பற்றி எடுத்துக்கொள்வோம்.

### செங்குந்தரின் தோற்றமும் புகழும்

பல்நூற்றாண்டுகளுக்கு முன் ஆதி துவாபர யுகத்திலே சூரபதுமனென்னுங் கொடுங்கோலரசனொருவனால் சிறைபுக் கலக்கணுற்ற தேவர்கள் பெரிதும் வேண்ட, அவனாற்றல் தொலைப்பான் கருதி, திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் தன் நெற்றி நாட்டத்திற்றோன்று மறுபொறிகளினிடமாக அறுமுகத்தினையனை யளித்து அன்னான் கனிஷ்டர்களாகவும் சேனையந் தலைவராகவும், அறுபொறிகடோன்று மமையத்துப் பயந்தோடிய பார்வதியாரின் கால் சிலம்பிற் சிதறும் நவமணி வாயிலாய்த் தோன்றும் நவசக்திகளின்பால் இறைவன் இச்சைகொண்டு இந்நிலவுலகத்திலே சிவபரம்பரையினர் என்றும் கந்தன் கனிஷ்டர்களென்றும் சிறப்புப் பெயரால் தன் வம்ச பரம்பரையொன்றை நிறுவுதல் வேண்டுமெனக் கருதி நம்மரபின் மூதாதையர்களான வீரவாகு முதலவராகிய ஒன்பதின்மரைத் தந்து கந்தவேள் படையாகுகிரெனப் பணித்துச் சிவந்த குந்தாயுதமாகிய ஈட்டிப்படையை நல்கி "செங்குந்த"ரென்னும் திருநாமஞ்சாத்திச் சூரர்கிளை வேரற வீட்டி, விண்குடியேற்றி நல்லொழுக்கம், கல்வி, செல்வம், பொறுமை, வாய்மையாமனைத்துங் கைக்கொளுமாறுய்த்துக் "கைக்கொள்வர்" என்னுங் காரணப் பெயரால் நம் சீரிய தெய்வீக மரபாம் செங்குந்த குலத்தை நிறுவினர் நீரோர் சடையின் நிமலனென்பர். இதன் விரிவைக் கந்தபுராணமுதலிய நூற்களில் பரக்கக் காணலாம். எனவே, இம்மரபோர் சிவசந்ததியாரென்றும், கந்தன் சகோதரர்களென்றும், கடப்பையந்தாரரென்றும், சேனைத் தலைவர்கள் என்றும் சிறப்புப் பெயரால் வழங்கப் பெறுவர்.

இனி, இம்மரபோர்கள் மக்கட் பிறப்பிலெவ்வாறுயர்ந்தார்கள் என்று பார்க்குமிடத்து இவ்வுலகத்தின் கண் விளங்கா நின்ற எறும்புக்கடையானை தலையாகவுள்ள எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவபேதங்களுள் சிறந்து விளங்குவது இம்மனிதப் பிறப்பேயாம். இம்மனிதப் பிறப்பும் (மேலோர்கள் என்று கூறப்பட்ட ஆதி சைவப் பிராமணர்கள் முதலாகப் பஞ்சமர்கள் ஈறாகவுள்ள அனைவர்களும்) தாமரைப் பூவில் வசிக்கும் நான்முக பிரமனாலே சிருஷ்டிக்கப்பட்டதேயாகும். அசராசரவுயிர்களாம் மஃறிணைப் பொருள்கள் போலவே இவர்களும் பிரம சிருட்டியின்பாற் பட்டவர்களே யாவர். இக்குந்தர்களோ வெனில் அயனால் சிருஷ்டிக்கப்பெறாமல் சிவாம்சமாக, நாபிக்கமலத்துதித்த நான்முகன் போல பார்வதியின் அம்சமாகிய நவசத்திகளினிடமாக அயோனிஜராகி நாபியின் மூலமாக வுதித்தார்கள் என்பது கந்தபுராணம். ஆகலின் மேற்கூறிய காரணங்களால் இச்செங்குந்தர்கள் பிரம்ம சிருஷ்டிக் குட்படாமல் சிவாம்சமாக



வும் அயோனிஜராகவும் தோன்றினமையின், பிரம்மசிருட்டிக்குட்பட்டு யோனிவாய்ப்பட்டுத் தோன்றிய ஏனைய இம்மக்கட் பிறப்பைக் காட்டிலும் மேலாம் பெருமையுடையார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ? நிற்க, இவர்கள் சூர சம்மார நிமித்தம் அறுமுகப் பெருமான் சேனையந் தலைவராகச் சென்றமையான் சேனைத்தலைவர்களென்றும், முருகக் கடவுள் போல சிவாம்சமாய் கந்தனுக்குப்பின் தோன்றலின் கந்தன் கனிஷ்டர்களென்றும் கடப்பையந்தாரரென்றும் சோதரர்களென்றும் துணைவோர்களென்றும் கந்தபுராணங் கூறும். தேவிகைக் குந்தம் பெறலால் "செங்குந்தரென்றும்" காரணப்பேர் பெற்றோர்களென்ப. சகல அண்ட சராசரங்களெவற்றினுக்கும் எல்லாம் வல்ல இறைவனும் முழுமுதற்கடவுளே முதன்மையாகுவர். அவரே முதலாளி. அத்தகைய சிவபெருமானின் வம்ச பரம்பரையில் வந்தோரிவர்களாதல் பற்றி இச்செங்குந்த மரபினருக்கு "முதலியார்" எனப் பட்டப்பெயர் வழங்குவதாயிற்று.

"இந்திரனயன் மாற்றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்த பான்மையினாற் சூலமழுப்படை யத்தனாற்கு
முந்திய நாமந்தானு முதலியாரானமையாற் செங்
குந்த சந்ததிக்கு மப்பேர் முதலியர் என்று கூறும்"

என்னும் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் திருவாய் மலர்ந்தருளிய ஈட்டியெழுபது என்னும் பிரபந்தப் பாசுரம் இதனை நன்கு வலியுறுத்தும். தவிர, இம்மரபோர் ஒழுக்கம், வாய்மை, சீலம், ஈகை என்னும் இவைகள் ஒருங்கமையப்பெற்று விளங்கும் புண்ணிய சீலர்களென்பதை

"தோக்களை மின்னாரைத் தவத்தரைக் குலத்தின் [வேத
மாக்களைச் சிசுவைக் கொன்றான் செய்ந்நன்றி மறந் [தானோன்
ஆக்கமதழித்தான் பாவமனைத்துஞ் செங்குந்தர் வீதி
தேக்கிடப் பிச்சைவாங்கி யுண்டிடத் தீருமன்றே"

என்னும் மதுரைப் புராணச் செய்யுளானுணர்க. தவிர, தொன்னூலாராய்ச்சிகளால் இம்மரபோர் திருமடம் கோயில் முதலிய தரும ஸ்தாபனங்களிலும், அறச்சாலை, நியாயஸ்தலம், பொதுமன்றம் முதலிய நீதி ஸ்தாபனங்களிலும் தலைமைவகித்து அரசர் பெருமக்களும் அஞ்சத் தரும பரிபாலனம் செய்துவந்தார்கள் என்று தெரிதலினால் ஏனை மக்கட் பிறப்பினரைக் காட்டிலும் அக்காலத்து எவ்வளவு சிறந்திருந்தார்களென்பது எளிதில் தெரியக் கிடக்கின்றது.

இன்னும் இச்செங்குந்தர்கள் தங்களது ஒழுக்கம், கல்வி, குணம், வாய்மை, பொறுமை, வீரம், என்னும் நற்குண நற்செய்கைகளினாலும், வீரதீரச்செயல்களினாலும் அயனைச் சிறையிட்டோரென்றும், காளிகைத்தாளம் பரித்தாரானர் என்றும், வல்லானை வென்றோர்களென்றும், எமனுக் கோலை விட்டோரென்றும், விலங்காத நன்னாவைப்படைத்தோரென்றும், பொய்த்தலைகொடுத்தலிற் புகழ்பெறுதென மெய்த்தலைகொடுத்த வீரர்களென்றும், செய்யுளுக்காச்சிரப்பாவாடையிட்டோரென்றும், தில்லைக்கொடிஏற்றுவித்தோரென்றும் பல்வேறு சிறப்புப்பெயர்களையும் காரணப்பெயர்களையும் உரிமையாய்க் கொண்டோர்கள் என்பது தொன்னூல்கள் பலவற்றுள்ளும் காண்பதோருண்மையாம். இச்செங்குந்தர்களின் பிரபாவம் முற்றும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் வெளியிட்டிருக்கும் 'செங்குந்த பிரபந்த திரட்'டில் பரக்கக் காணலாம்.

இதுகாறும் கூறியவாற்றால் செங்குந்தர்களைப்பற்றி ஒருவாறு சிறிது தெரிந்தவர்களானோம். இனி சிவபூடணமென்பது யாது? அதன் வரலாறும் பெருமையுமென்ன? அதை அணிவதாலுண்டாகும் பலன் யாது? அதனை இச் செங்குந்தர்கள் அணியவேண்டுமென்பதின் காரணமென்ன? என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

சிவபூடணம் என்பதற்கு முன்னரேநிரதிசயானந்த இன்பமாகிய மங்கலப் பொருளை நல்கக்கூடிய மோக்ஷ தாதாவாகிய பதிப் பொருளாம் நெற்றியங்கண்ணுடை நிமலன் அணியக்கூடிய ஆபரணம் என்று பொருள் கூறினோம். அத்தகைய சிவாபரணம் வீபூதி, உருத்திராக்கம் என இருவகைப்படும். சிவபெருமானைப் பதிப்பொருளாய்க் கொண்டு வழிபடுவோர்களும், அதனுட் சமயமாகிய அறுசமயத்தோர்களும் சிவ சின்னமாகிய வீபூதி உருத்திராக்கங்களைத் தத்தமன்பி னறிகுறியாக அணிதலவசியம். அணியாவுழி சைவர்கள் என்றுவது, சிவபெருமானைப் பதிப்பொருளாய்க் கொண்டுள்ள ஒரு சமயக் கோட்பாட்டை யுடையவர்கள் என்றுவது தங்களைச் சொல்லிக் கொள்ளுதலியலாது.

"பரமசிவனமலன் பத்தற்குச் சின்ன
முகுவுடலிற் கண்டியு ம்றும்."

என்று கூறியிருத்தலின் விபூதி ருத்திராக்க மணிதலவசிய மென்பது பெற்றாம்.

## திருநீற்றின் வரலாறும் பெருமையும்

விபூதி என்பதற்கு "திருநீறே பற்பம் பொடியொடு விபூதி காப்பாம், புண்ணிய சாந்தஞ் சாணி" என நிகண்டு நூலார் கூறியபடி விபூதி நீறு, பசுமம், பசிதம், பொடி, சாரம், இரக்ஷை, யெனப் பல்வேறு பெயர்கள் வழங்குகின்றன. விபூதி=மேலானஐசுவரியம் "ஐச்வர்யகாரணுத் பூதி" என்னும் வேதவாக்கியத்துக் கிணங்கத் தன்னை யணிந்தார்க்கு அழிவில்லாத மேலாம் மோட்ச செல்வத்தை யளித்தலால் விபூதி என்றும், வி=சிவபெருமான், பூ=பாவனை, தி=அடைதல் எனக்கொண்டு சிவத்துவபாவனையை விளக்கும் இயல்புடையது என்றும் அறிஞர் பொருள் கூறுவர். பாவங்களை நீறுக்கலால் நீறு, பசுமம் என்றும், அறியாமை காடழித்துக் சிவஞானப் பயிர் விளைவித்தலால் பசிதம் என்றும், ஆன்மகோடிகளின் மலங்கழுவுதல் பற்றிச் சாரம் என்றும், சகல ஜீவாத்மாக்களையும் துன்பத்தினின்று விடுவித்து இரக்ஷை புரிதலால் இரக்ஷை, காப்பு என்றும் காரணப் பெயர்கள் வழங்குவதாயின.

"நீடலுறுந் தீவினை யனைத்தும்
நீற்றிவிடலால் நீறென்றும்
வீடில் வெறுக்கை தருதலினுல்
விபூதி யென்று முயிர்தோறுங்
கூடுமல மாசினைக் கழுவுங்
குணத்தாற் சாரமென்று மட
மோடவர் சோதியைத் தாலாற்
பசிதமென்று முரைப்பரால்"

என்ற ஆன்றோர் வாக்கே மேற்கூரிய கூற்றை வலியுறுத்தும்.

திருவருளுருவாய் விளங்கும் பர்வத ராஜபுத்திரியாராகிய உமையம்மையார் தமக்குப் பத்தினியாகத் தோன்ற, ஆணவ மாதி மலங்களை நீக்கி யருளும் வேதவேதியராகிய சிவபெருமான் பிரளய வெள்ளமே நீராகவும், பல்லாயிர கோடி அண்டங்களே மண்டபங்களாகவும், கடல்சூழ்ந்த நிலவுலகமே வேதிகையாகவும், அரிபிரமேந்திராதி தேவர்களே அவியாகவும், ஏனைய பல்லுயிர்களே பசுக்களாகவும் கொண்டு தனது நெற்றியங் கண்ணென்னுங்குண்டாக்னி மூட்டி யாகஞ் செய்வாராயினர். அந்த யாகத்தினின்றுந் தோன்றிய வெண்டிருநீற்றை அகங்கார மமகாரமாகிய அகப்பற்றும் புறப்பற்றும் ஒழியுமாறு, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை யான்மாக்களுக்கும் சரீரத்திற் றரிக்கும்படி அமைத்தனர் என நூல்கள் கூறுகிற்கும். திருநந்தி தேவர், திருமால், பிரமன், இந்திரன் முதலாகவுள்ள, பல்தேவர்களும், பராசரன், வசிட்டன், வியாதன், கௌதமன், முதலிய முனிபுங்க சிரேஷ்டர்களும், விபூதி யணிதலா லளவிறந்த நன்மைகளையும் மோக்ஷத்தையும் பெற்றுரென்றால் விபூதியின் பெருமையைப் பற்றி நாம் பேசுதலவசியமின்றும். விபூதியைக் காட்டிலும் அரிய பெரிய பொருள்கள் உலகத்தில் வேறெதுவுமில்லை என்பதற்கு,

"தீர்த்த முனதிற் பெரிய தீர்த்தமக்கில்லை
யேத்தரிய செல்வமுளிதிற் பெரியதில்லை
பேர்த்துரை மருந்தினுளிதிற் பெரியதில்லை
நீத்தலுறு பண்டிதருணீற்ற நிகரில்லை"

என்னும் செய்யுளொன்றே போதிய சான்றும். இனி உருத்திராக்கத்தைப் பற்றி சிறிதுகூறி மேற் செல்வாம்.

## உருத்திராக்க வரலாறும் பெருமையும்

சிவசின்னமாய் விளங்கு முருத்திராக்கமென்பது உருத்திர+அக்கம் என்னுஞ் சொற்கள் தீர்க்கசந்தியாய்ப் புணர்ந்து உருத்திராக்கமென்றுய் உருத்திர மூர்த்தியாகிய சிவபெருமானின் றிருக்கண்ணெனப் பேர்பெறும். சிவபெருமானது திரி நேத்திரங்களினின்றுந் தோன்றிச் சிறந்தனவாய் விளங்கலால் அக்கம் கண்ணென்றுயிற்று. தன்னை யணிந்தார் மாட்டுள்ள குற்றங்களையும் பாவங்களையும் கண்டித்தலால் கண்டியென்றும், சிவபெருமானது திருக்கண்களினிருந்து பொழிந்த முத்து போன்ற நீர் வடிவாய், நிற்றலிற் "கண்மணி" யென்றும் புண்ணிய சீலர்களால் கொண்டாடப்படுகின்றது.

முற்காலத்திலே நம் அறுமுகத் திறையால் செறுமுகத்தழிக்கப் பெற்ற தாரகன் என்பரனின் மைந்தர்களாய தாருகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, யென்ற மூன்றசுரர்களும் தாங்கள் பெற்ற தவமகிமையால் பொன், வெள்ளி, இரும்பு என்னும் மும்மதில்களையும் நகரங்களாகப் பெற்று, தங்கள் தந்தையாகிய தாரகனைக் கொல்வித்த தேவர்கள் மேல் வஞ்சினம் தீர்ப்பான் கருதி, பல இன்னல்களிழைத்து வருத்துவராயினர். தேவர்கள் முறையிடக்கேட்ட சிவபெருமானவர், தம்மைச் சரணடைந்த தேவர்களைக் காத்தலும், அன்னோர்க்குத் துன்பமிழைக்கும் அம்மூன்றசுரர்களும் சிவபூஜை வழுவாதவராய் அன்பே வடிவாய்க்கொண்டு பக்தி செய்யும் பண்புடையோர்களாதல்பற்றி யவர்களை யொறுக்காது



காத்தலும் முறையாகுமாதலின், தேவர்களிடுக் கணைத் திருவுளத்தடைத்து இரக்கமுற்று அவர்கள் துன்பம் நீங்கு மெல்லையை நோக்கி ஆயிரம் தேவவருடமளவும் தமது மூன்று கண்களை மலர்த்தி அவைகளினின்றும் நீர் பொழிந்தனர். சூரிய வடிவாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு உருத்திராக்கங்களும், சந்திர ரூபமாகிய இடக்கண் பொழிந்த நீரிலே பதினாறு உருத்திராக்கங்களும், அக்கினியுருவாகிய நெற்றிக் கண்பொழிந்த நீரிலே பத்துஉருத்திராக்கங்களும் உதித்தன. இடக்கண்ணினின்று வெண்ணிற வுருத்திராக்கமும், வலக்கண்ணினின்றும் கபிலநிற வுருத்திராக்கமும், அதினின்று செந்நிற வுருத்திராக்கமும், அதினின்று பொன்னிற உருத்திராக்கமும் நெற்றிக் கண்ணினின்று கருநிற வுருத்திராக்கமுந் தோன்றின. அவைகளுள் ஒவ்வொன்றையும், சத்தி, விஷ்ணு, பிரமன், சத்தமாதர்கள், அட்ட வித்தியேசுரர், திக்குப் பாலகர், ஏகாதசருத்திரர், வாசுதேவர் முதலிய பன்னிருவர், சதருத்திரர், அட்டவசுக்கள், அசுவினி தேவர்கள், துவாதசாதித்தர்கள் ஆதி சேடன், முனிவர் முதலிய கணங்களும் சிவபெருமான் ஆஞ்ஞையின்படி தரித்துக்கொண்டார்கள். வெண்ணிறமணி பிராமணராலும், கபிலநிற மணியும், செந்நிறமணியும் க்ஷத்திரியர்களாலும் பொன்னிறமணி வைசியர்களாலும், கருநிறமணி சூத்திரர்களாலும் தரிக்கற்பாலனவாம்.

"உண்மெமணிகள் பலவுமவற்றுள்ளுங்
கண்டிவி சிட்டமெனக்காண்,"

என்று ஆன்றோர்கள் கூறுதலின் உருத்திராக்கத்தின் பெருமை அளவிடற்கரியன. உருத்திராக்கமணிதலின்றிச் செய்யுஞ் சிவபூஜை பயனின்றும்.

"பூணுமற்கண்டி சிவ பூசை புரிவார் பலத்தை
காணூர் பூணுய் கண்டிகை."

என்பதனுல் அறிக. சிவ சின்னமாகிய விபூதி உருத்திராக்கத்தினை யணியக்கூசும் புல்லியரைச் சிவபெருமான் பார்க்கக்கூட கூசுகிறுர். வெருக்கிறுர் எனின் அத்தகையோர்களுக்குச் சிவபெருமானருள்வதியாங்ஙனம்? இதனை,

"பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லிடரைக் காண்பதற்குக் கூசமரன் கைதறு" என வரும்.

சைவசமய நெறியாலுணர்க. எனவே மேற்கூறியவைகளான் உருத்திராக்கத்தின் வரலாறு பெருமையாதியன ஒருவாறு தெரியப் பெற்றேம்.

இனி இத்தகைய சிவபூடணத்தைச் சைவ சமயத்தினர் யாரும் அணிதல் அவசியமென்பதொருதலை. எனினும் சிறப்புவகையால் இவ் விபூதிருத்திராக்கம், நம் செங்குந்தர்களுக்கே மிக்கவுரிமையானது, அவசியமானது என்பது யாதோவெனிற் கூறுதும்.

1. விபூதி உருத்திராக்கம் சிவன் சத்தி ரூபமாய் சிவபெருமானிடத்திருந்துதித்தன :— அதுபோல விச் செங்குந்தரும் சிவன் சத்திரூபமாய் அறுமுகத்தினபனுர் பின் சிவபெருமானிடத்திருந்து சத்தியின் வரப்பிரசாத விசேடத்தான் நவசத்திகளின் வாயிலாயுதித்தனர்.

2. விபூதி உருத்திராக்கங்களோ ஆணவ மலக்காரிருளகற்றி ஞானச்சுடர் கொளுத்திச் சகலான்மகோடிகளும் திருவடிப்பேரடைவானெளிரும் தெப்பமாக சிவபெருமானுல் தோற்றுவிக்கப்பட்டன; குமரவேளுங் குந்தரும் அவ்வணமே அசுரராம் ஆணவமலக் காரிருளோட்டித் தேவர்களாகிய ஞானச்சுடர்கொளுவி முத்தியங்கரைப்பட் டுய்யுமாறு சிவபெருமானுல் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

3. தன்னை யணிந்தார்க்கு இம்மையிற் சுகபோகத்தைம் மறுமையில் முத்தியின்பத்தையும் விபூதிருத்திராக்கங்களளித்தல்போல செவ்வேளும் செங்குந்தரும் தங்களைச் சரணென்று கதியாயடைந்தார்க்கு இம்மையில் சகல துன்பங்களையும் அறவே நீக்கி, வெற்றிப்பாட்டினை எண்ணியாங்கெய்தவளித்து மறுமையில் இறைவன் திருவடியாம் முத்திப்பேற்றினையும் அடைவித்தல் திண்ணம்.

4. விபூதி ருத்திராக்கங்கள் தேவர்களின்னல் கற்றவும் ஆன்மகோடிகளின் மலபந்தகளறுக்கவும் தோன்றினவைகளாம். செவ்வேளும் செங்குந்தரும் மேற்கூறியவண்ணமே தேவர்களிடுக்கண் அகற்றவும் ஆன்மகோடிகளின் மலபந்தங்களறுக்கவுமே தோன்றினுர்களென்பது ஆன்றோர் நூல்களால் அறியத்தக்கதோருண்மையாம்.

இன்னும் இதுபோன்ற பலவித காரணங்களால் செங்குந்தருக்கும் சிவபூடணத்திற்கும் ஒப்புவமைகாட்டக்கூடிய விஷயங்கள் அளவிறந்துள்ளன. விரிக்கிற் பெருகுமாகையால் செங்குந்தர்கள் சிறப்புவகையாலும், உரிமைப்பாட்டினுலும் விபூதிருத்திராக்கங்களைத் தரித்தல் மிக்க அவசியம், என்பதைப்பற்றி கூறி எடுத்துக் கொண்ட வியாசத்தை முடிப்பாம்.

1. செங்குந்தர்கள் சிவகுமாராதல் பற்றி "தந்தை யெவ்வழி மகனுமவ்வழி" யெனக் கூறுதல் போல "தந்தைப் பொருள் மைந்தர்க்குள" என்பதற்கிணங்க தன் பிதா பொருளாதல் பற்றி இவர்களும் சிவபெருமானைப்போல் விபூதி உருத்திராக்கம் அணிதல் மிக்க அவசியம் என்று கூறுதல் மிகையாகாது.

2. செங்குந்தர்களனைவரும் சிவசமய நெறியினராய் சிவபூஜை மேற்கொண்டொழுகலின், கண்டிகையும் நீறும்புனைதலின்றிச்செய்யுஞ் சிவபூஜை பயன்தாராதென வேதபுராண இதிகாசம் கூறலின் பூர்வநதொட்டேயிவர்கள் நல்லொழுக்கம், சிவகாருண்யம், சிவபக்தி இவற்றிலீடுபட்டிருந்தமையாலும் விபூதி உருத்திராக்க மணிதல் செங்குந்தர்களின் மிக்க அவசியமான கடமைகளில் ஒன்றும்.

3. விபூதி வெண்ணிறமுடைய சிவரூபமாகவும், உருத்திராக்கம் கருமை முதலிய நிறங்களையுடைய சக்தி வடிவமாகவும் எண்ணப்படலின். அத்தகைய சிவனுஞ் சத்தியும் இச்செங்குந்தர்களுக்குத் தந்தை தாயர் என்னும் மரபு பற்றியும் தந்தை தாயார்களின் வடிவமாய் விளங்கும் விபூதி உருத்திராக்கத்தைச் செங்குந்தர் களணிய வேண்டுமென்பது சொல்லாமல் விளங்குவதோர் உண்மை யென்பது ஆன்றோர் கூற்று.

4. விபூதி உருத்திராக்கம் நிரதிசயானந்த நித்திய முத்திக்கும் அகப்பற்று புறப்பற்று இதுகளை யொழித்து அழியாயின்ப சுகமளித்தலுக்குங் காரணமாயிருத்தல்பற்றி ஸ்ரீகண்டரான சிவபெருமான், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை யான்மாக்களுக்கும் தரிக்கும்படி கட்டளை விதித்துளாராதலின் "ஏவாமக்கள் மூவாமருந்து" என்பதற்கேற்ப செங்குந்தரும் சிவசின்னங்களைத் தாமே யணிய வேண்டுமென்பது பெறப்படுகின்றது.

5. குந்தர்களின் முன்னோனாகிய குன்றமெறிந்த குமரவேளும் விபூதி ருத்திராக்கதாரணராய் தண்டபாணி முகூர்த்தமாய் குன்றுதொறு மெழுந்தருளல்பற்றி அவன் கனிஷ்டர்களாய இவரும அவரைப்போல் விபூதி உருத்திராக்கமணிதல் வழக்கா மன்றே.

6. தவிர, இச்செங்குந்தர்களின் மூதாதையர்களான நவவீரரும் விபூதி ருத்திராக்கதாரணராயிருந்தமைபற்றியும் "பின்னங்களையு மணி பிடுஞ்ஸ்ரீ ருதிசிவச் சின்னங்களை விருத்தி செய்யுங்கை" என்று செங்குந்தர் பிரபாவம் பேசுதல்பற்றியும் இச்செங்குந்தர்கள் விபூதி ருத்திராக்கங்களை விதிப்படி அணிதல் வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கத்தக்க விஷயமன்றே?

ஆதலின், செங்குந்த குலமக்கள் யாவரும் இனிமேலாவது இத்தகைய சிறப்புவாய்ந்த சிவசின்னமாகிய விபூதி ருத்திராக்கங்களை யணிய முன் வருவார்களாக. செங்குந்த மக்களேயன்றிச் சிவபெருமானை வழிபடு கடவுளாய்க்கொண்ட மற்றேனைய வகுப்பார்கள் யாவராயினும் விபூதி ருத்திராக்கமணிய வேண்டுதலத்தியாவசியம் என்றும் அத்தகைய சிவபூடணத்தையணிந்து எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாம் சிவபெருமானின் திருவருளுக்குப் பாத்திரராக வேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை.

"எவரேனுந் தாமாகவிலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி
யுவராதேயவரவரைக் கண்டபோது
வுகந்தடிமைத் திறம்நினைந்தங் குவந்துநோக்கி
யிவர் தேவரவர் தேவரென்று சொல்லி
யிரண்டாட்டாதொழிந்தீ சன்திறமேபேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே."

என்பது தேவாரம். இதனால் திருநீறுங் கண்டிகையும் உள்ளன்போடு அணிந்தார்கள் மாட்டுச் சிவபெருமான் நீங்காது திருவருள் செய்கிறாரென்பது தெரியக் கிடக்கின்றமையின், செங்குந்த குலமக்களேயன்றி, சிவஞானச் செல்வர்கள் யாவரும் சிவபூடணமாகிய விபூதி ருத்திராக்கத்தினைத் தரித்து இம்மையில் இகசுக போகங்களனைத்தையும் பெற்று மறுமையில் அழியா நிரதிசயானந்த இன்ப முத்தியாகிய இறைவன் திருவடிப்பேறு மடைவார்களாக! இறைவனன்னார் மாட்டுத் திருவருள் பாலிப்பானாக. சுபம். சுபம். சுபம்!

செங்குந்தரும் சிவபூடணமும் வாழ்க.

வை. ச. இராமலிங்க முதலியார்,
துணைத்தலைவர், சைவசித்தாந்த செங்குந்தர் சமாஜம்,
காஞ்சிபுரம்.



# பொது விஷயங்கள்

## விதிபெரிதா? மதிபெரிதா? என்ற ஐயவினாவுக்கு விடை.

சென்ற சித்திரைத் திங்களில் வெளிப்போந்த செங்குந்த மித்திரனில் விதிபெரிதா? மதிபெரிதா? என்ற ஐயமொன்று ஒரு நண்பரால் வெளிப் போந்தது. அவ்வினாவுக்குக் கீழ்க்கண்ட விடை ஒருவாறு பொருந்துமென நினைக்கிறேன்.

விதி, ஊழ், தெய்வம், பழவினை யென்பன ஒரு பொருளுடனேயே நம் பழந்தமிழ் நூல்களில் வழங்கப்படுகின்றன. இவை, மக்களால், தம் அறிவைக்கொண்டு நல்லனவாகவோ தீயனவாகவோ ஆக்கிக் கொள்ளப்படுகின்றன. ஆகவே, ஊழுக்குக் காரணம் அறிவு என்பது தெள்ளிது. இங்ஙனம் இவ்வூழானது தம் அறிவினால் ஆக்கிக் கொள்ளப்பட்டதாகவே, தாம் செய்ததன் பயனைத் தாமே யனுபவிக்க வேண்டியதாகித் தம் அறிவைக்கொண்டு பின்னர் அதனை நீக்க வியலவல்லதாகிறது. இது பற்றியே உலகில், 'வினைவிதைத்தவன் வினையறுப்பான், தினைவிதைத்தவன் தினையறுப்பான்' என்ற பழமொழியும்,

"தாந்தாம் முன்,செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே" எனவும்

'ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி' எனவும்
"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றாகும் ஆம்இடத்தே ஆகும்"

எனவும்

''பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு' எனவும்
"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

எனவும் பெரியோர்கள் எடுத்துரைக்கலாயினர். ஆகவே, தானே தன் அறிவின் றுணையைக்கொண்டே செய்துள்ள வினையின் பயனை, மறுபிறவிகளில் தானே அனுபவிக்க வேண்டுமேயன்றி மற்றையவன் அனுபவிக்கவும் பங்கிட்டுக்கொள்ளவும் வாரான் என்பது துணிபு; அனுபவிக்காமலும் விடமுடியாது.

இங்ஙனம், ஊழை நல்லதாகவோ, தீயதாகவோ ஆக்கிக் கொண்டது அறிவினாலேயேயன்றி வேறொன்றினாலுமல்ல. ஆகையால், விதிபெரிதா? மதிபெரிதா? என்ற ஐயத்தைக் காரணம் பெரிதா? காரியம் பெரிதா? என்னும் ஐயத்தோடு ஒப்பிடலாம். இதுபற்றியே திருவள்ளுவனார்,

"ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

எனக் கூறினர். காரணம் இன்றிக் காரியம் நிகழாதவாற்றாற் காரணம் பெரிதாயவாறு போல, அறிவின் முயற்சியாலன்றி ஊழெனவொன்றுண்டாக்கிக் கொள்ளப்பட்டதில்லை. யாதலால், அறிவே ஊழினும் பெரிதெனக் கண்டனம்.

சுபம்.

ஐ. இராஜு முதலியார்,
தமிழாசிரியர், பூவிருந்தவல்லி.

# மாதர் பகுதி

## வாழ்க்கைத்துணைநலம்

உலகின் மக்கட்கூட்டத்தினரை ஆண் பெண் என இருபாலினராகப் பிரிக்கலாம். இவ்விரு பாலினராலும் நடத்தப்படுவதை உலகில் இல்வாழ்க்கை என்கிறோம். ஆகவே இவர்கள் இருவரும் தத்தமக்குள் வாழ்க்கைக்குத் துணை புரிபவராவர். எனவே, வாழ்க்கைத்துணைநலம் என்பது வாழ்க்கைக்கண் துணைபுரிந்துகொள்ளும் ஒவ்வொருவரினுடையவுமான நலன்களைக் கூறுவது எனப்பொருள்படும். இவர்களிருவ

ரும் மனமொத்து நடத்தினல் மட்டும் வாழ்க்கைச் சிறப்பெய்தும். இவ்விருவருள் ஒருவர் ஒவ்வாமலாவது, இன்றியாவது இருந்தால் வாழ்க்கை யிலையாம், இதனையே,

"காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே—ஓதுகலை
யெண்ணிரண்டும் ஒன்றுமதி யென்முகத்தாய்நோக்கு [மால்
கண்ணிரண்டும் ஒன்றையேகாண்."

எனக் கூறினர் சிவப்பிரகாச சுவாமிகள். எனவே, 'மனையாள் கணவன்பாற் காதல் கூர்ந்தவளாகவும், கணவன் மனைவியின்பாற் காதன்மிக்கோனாகவும் இருந்து, இரண்டு கண்களும் ஏககாலத்தில் ஒரே பொருளைப் பார்க்குமாறு போல ஒரு கருமத்தைச் சிந்தித்துச் செய்தல் வேண்டும்' என்பது புலப்படுகிறது.

இங்ஙனமிருக்க வேண்டுமாயின், இருவருக்கும் பொறுமை, ஒற்றுமை, அன்பு ஊக்கம் முதலிய நற்குணங்கள் இருக்கவேண்டுவது அவசியம். இக்குணங்கள் எளிதில் உண்டாவன வல்ல, கல்வியறிவினால் விளையக்கூடியவை.

ஆயினும் இவ்விருவருள் பெண்பாலரே இவ்வாழ்க்கைக்குப் பெருந்துணை புரிபவராவர். இதுபற்றியே ஆடவனுடன் கூடி வாழ்க்கை நடாத்தும் ஒரு பெண்ணிற்கு மனைவி, இல்லாள் என்னும் பெயர்கள், மனைக்குரியவளெனவும் இல்லிற்குரியவளெனவும் பொருள்பட ஆன்றோர்களால் அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆடவன் எவ்விதமிருப்பினும் மனையாளே சிறந்தவளாக இருக்கவேண்டும் என்பது தெள்ளிது.

ஒரு பெண்மணி, தன் கணவனால் அளிக்கப்படும் பொருள்களைக் கொண்டு அப்பொருளுக்குத்தக்க இல்வாழ்க்கையை நடத்த வேண்டும்; தாயென கணவனைப் பராமரிக்கவேண்டும்; தன் மக்களைச் சீராட்டி வேளையறிந்து அமுதூட்டி அணிமிக்க மணிபூட்டி, அலங்கரித்து, நல்லொழுக்கத்திற் பயிற்றுவித்து காசொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்க வேண்டும்; கணவனுக்குச் சமயம் வாய்த்துழி மந்திரியென மந்திரங் கூறவேண்டும்; இத்தகைய குணங்களை யுடையாளே மனைக்குரியவளாவள். ஆகவே பெரியாரும்,

"மங்கலம் என்ப மனைமாட்சி" எனவும்,
"மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்" எனவும்,
"இல்லாள் அமைந்தமேயில்" எனவும் கூறினர்.

இவள் இங்ஙனம் ஆதலால், உலகில், மக்கட்குப் பெருந்துணையாய் கல்வியைக் கலைமகள் எனவும், செல்வத்தை இலக்குமி யெனவும், வெற்றியைக் கொற்றவை (வனதுர்க்கை) எனவும் பெண்வடிவமாகப் பெரியார் போற்றலாயினர். சிவபிரானுடைய அம்சமாகிய முருகனுக்கு வெற்றியைத் தந்தது உமாதேவியாரின் அம்சமாகிய வெற்றிவேலே யெனப் புகல்வர். உமாதேவிக்குச் சக்தி யெனவும், வேலுக்குச் சக்திவேலெனவும் பெயருண்டாயது இதுபற்றியேபோலும். சிவம் உலகைத் தோற்றுவிக்குஞ் சக்தியின் வடிவு பெண்வடிவே யன்றோ?

இத்துணைச் சிறப்புவாய்ந்த பெண்மணிகள் கல்வியறிவின்றேல் எவ்வாறு வாழ்க்கைக்குத் தக்க துணைவிகளாக முடியும்? நம் நாட்டில் பெண்மக்கள் இவ்விஷயத்தில் மிக்க சீர்கேடான நிலையிலேயே யிருக்கிறார்கள். இக்கேடான நிலையில் பெண்மக்கள் வாடுவதற்குக் காரணம்: நம் நாட்டில் ஆடவர்கள் கல்வி யறிவிற் குறைந்தவர்களாக இருப்பதும், பெண்மக்களை ஆண் குழுவினரின் அடிமைகளெனக் கருதி வருவதுமான பெருங் குறையேயாம்.

அறிவிற் சிறந்த எந்த ஆடவனும், ஒரு பெண் கற்றிருந்தால், கள்ளக் கணவனுக்குக் கடிதம் எழுதுவாள் எனவும், கணவனை மதிக்கமாட்டாள் எனவும் கூறமாட்டான். மற்றும், பெண்மக்கள் ஆண் குழுவினரின் அடிமைகளெனவும், கேவலம் காம இச்சையைமட்டும் பூர்த்தி செய்துகொள்ளும் கருவிகளெனவும் ஒரு கற்றவன் நினைத்தற்கிடமில்லை. பெண்மக்களைக் குடிவெறியினாலும் கோபவெறியினாலும், அறிவீனத்தாலும் வைதும் அடித்தும் விளையாடும் அரங்கென எந்த மதிவாணனும் மதிக்கான்; ஆடவன் யாது செய்யினும் பொறுத்துக்கொண்டிருக்க அவன் மனைவி கடமைப் பட்டவள் எனக் கழறான்; நினையவு மாட்டான்.

கல்வி, மக்கட்குக் கண் போன்றது; மக்களின் அறிவை வளர்ப்பது; "கேடில் விழுச்செல்வம் கல்வி, யொருவற்கு மாடல்ல மற்றையவை" எனப் பொய்யா மொழியாரால் போற்றப்பட்டது. அத்துணைச் சிறந்த கல்வியைக் கற்பதனால், ஒரு பெண் தன் அறிவைக் கேடுடையதாக்கிக் கள்ளக் கணவனுக்குக் கடிதம் எழுதுவாளெனில் அக்கூற்று அறிவுடையான்



கூற்றாகுமா? இயற்கையிலேயே தீயவழியிற் செல்லா ஒரு பெண்ணைத் தீயவழியிற் செலுத்தக் கூடியது கல்வியென்று எந்த அறிவிலிதான் கூறுவான்? அங்ஙனமே கல்வி ஒரு பெண்ணைத் தீயவழியிற் புகுத்துமானல், ஆடவனைமட்டுந் தீயவழியிற் செலுத்த அக்கல்விக்குத் திறனில்லை போலும்! இங்ஙனம் கூறுவோர்கள் கல்விக் குறைவுடையவர்கள் என்று கூற வேறுசான்று வேண்டுமோ?

பெண்களுக்குக் கல்வி வேண்டாமென்று கூறும் அறிவிலிகள் தங்கட்கு இருகண்களும் வேண்டா என்றுரைப்பவராகவில்லையா? இவர்கள் தங்கள் இல்வாழ்க்கையின் பயனையும், மக்களின் சிறப்பையும், இம்மை மறுமை யின்பங்களையும் ஒருங்கே யிழந்த பேறிலிகளா மென்பதற்கு ஐயமுண்டோ? தங்கள் மனைவியரை, தங்கள் வாழ்க்கைத் துணையை,தங்கள் கைகளிலொன்றை, இருகண்களில் ஒன்றை அடிமை என்ற தன்மையில் ஆளும் நோக்கத்தினராக இருப்பவர்கள் தவிர,மற்றையோர் ஒருக்காலும் பெண்மக்கட்குக் கல்வி வேண்டாம் என மறுக்கார். தங்கள் கல்விக்குறைக் காட்டுமவர் தவிர, மற்றையவெவருந் தங்கள் மனைவியர்கள் கற்றிருந்தால் தம்மை மதியார் எனக்கூறவாயெடார்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யும்மழை" எனப் பேரறிஞரால் புகழப்பட்ட பெண்கள்' கல்வியின்றி யிருந்திருக்கமுடியுமா? "நூன் மாண்பு மாந்தர் மனக்கோட்டந் தீர்க்கும்" எனப்புகன்றிருக்க அந்நூலைப் பெண்கள் கல்லாதிருந்தால் அப்பெண்களின் மனக்கோட்டந் தீர்வது வேறெதனாலேயோ? மனக்கோட்டந் தீராமங்கையரை மனைவியராக மணந்த மணவாளர், கல்லைக் கட்டிக்கொண்டு கிணற்றில் விழுந்தவர்கள் எனக் கூறப்படுவதிற் குறை யென்னையோ? ஔவை பெண்ணன்றோ? அவளாற் கூறப்பட்ட நீதி நூல்கள் கற்றோராற் பொன்னெனப் போற்றப்படவில்லையா? ஔவை காலத்திருந்த புலவர்களில் ஔவையன்றோ மேம்பட்ட கல்வியாசி? அவளுடைய தீய ஒழுக்கங்களாக ஒரு சிறு துணையும் நாம் காணமுடியுமா?

கண்ணகி, தன் காதலன் (கோவலன்) மாதவி மய்யலிற்சிக்கி, முன்னோரீட்டிய பொருளையும், மின்னேரிடைதன் மென்பணிகளையும் இழந்து வறியனாகி, மாதவியாற் புறக்கணிக்கப்பட்டுத் தம் ஒழுக்கனாகிய காலத்துங் கணவனை வெறுத்தாளில்லை. பின்னர், அவனொடு மதுரை மாநகரம் ஏகிய காலத்துந் தன் கணவற்கு அடிசிலிட்டுண்பித்த பிறகு, தன் கணவன் தனைப் புறக்தழீஇ யிருத்தி, முகனமர்ந்து, தான் செய்த தவறுகளை யுன்னியுன்னி யுரைத்துரைத்து வருந்தினனாக, அக்காலத்துந் தன் கணவன் முகத்தை யினிது நோக்கி வருந்தினளாய்,

"அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலுந்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னைநும்
பெருமகள் தன்னொடும் பெரும் பெயர்த் தலைத்தான்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை யில்லா முனிவிகந் தனனா
அற்புளஞ் சிறந்தாங்கு அருண்மொழி யளைஇ
யெற்பா, ராட்ட யாணகத் தொளித்த
நோயுந் துன்பமும் நொடிவது போலுமென்
வாயன் முறுவற்கு அவர் உள்ளம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந் தனன்யான்" என்றனன்.

அதாவது "(நீவிர் என்னுடன் இல்வாழ்க்கை நடத்தாக் குறையினால்) அறவோர்க்கு அளித்தலையும், அந்தணரைப் பாதுகாத்தலையும், துறவிகளை யுபசரித்தலையும், பழமையான சிறப்பினையுடைய விருந்தினரை யெதிர் கோடலையும் இழந்த என்னை, நுமது தாயருந் தந்தையரும் தங்கள் முன் வெறுப்பின்றி யிருக்கும்படி, அன்புடன் கூடிய உள்ளத்தோடு, அருண்மொழிகளைப் புகன்று, என்னைப் பாராட்ட (அதனால்) நான் (அவர்களின் ஆதரவைப்பெற்று) நும்முடன் கூடி வாழாததாலுண்டாகிய நோயையுந் துன்பத்தையும் மறைத்து, அவர்களுடன் இனிய முகங்கொண்டு பழக, அவர்கள் (என் உள்ளக் கிடக்கையை யறிந்து) நான் மகிழ்வடையத் தகாத நிலைமைக்காக வருந்த, நீவிர் போற்றற்கில்லா ஒழுக்கத்தைப் புரிந்தீர். நான் சிறிதும் மாறுபடாத மன ஒழுக்கத்தை யுடையேனாதலால், நும் வறுமையை யேற்று நும்முடன் மதுரைக்கு வரவெழுந்தேன்" என்பதாம்.

இக் கண்ணகியம்மை கல்வி யறிவினளாக இராவிடின் இங்ஙனம் நல்லொழுக்க முடையவளாகவும், கணவன் பிழைகளைப் பொறுக்கக் கூடியவளாகவும், கணவன்பான் மனங் கோணுதவளாயும் இருக்க இயலுமா? என்பதை ஆராய்க.

இன்னும் புறநானூற்றினும் அகநானூற்றினும் பாடியிருக்கும் பாட்டுகளிற் பெண்மக்கள் பாடியனவாகச் சொற்சுவை பொருட்சுவை மலிந்த செய்யுட்கள் பல காணப்படுகின்றன. அவற்றை யெடுத்துரைக்கின் விரியுமென்றஞ்சி விடுத்தனன்.

ஆயின், தற்காலத்திய கல்விமுறை சீர்கேடான முறையில் இருப்பதால், இம் முறையில் நமது பெண்கள் கற்றல்கூடாது. பெண்கள் கற்க வேண்டியதை குடும்பத்தை நடாத்தும் முறையைப் போதிப்பவையும், குழந்தைகளைப் பாராமரிக்கும் முறைகளைக் கற்பிப்பவையும், நீதி நூல்களும், பூகோள கணித சரித்திர நூல்களும், இயற்கைப் பொருள் நூல்களும் ஆம். அன்றியும் பெண்மக்களின் பழக்கங்கள் நல்முறையிற் பழக்கப்பட வேண்டும். நவீன நாகரிகப்படி யாவருடனும் பழகும் வழக்கங் கூடாது. தனிமையில் அங்குமிங்குஞ் செல்வதுந் தவறு. இம்முறையிற் பெண்கள் கற்றால் உலகிற்குப் பெருந்துணை செய்யும் மக்களைப் பெற்று வளர்க்கத்தக்க நிலைமையிலிருந்து, கற்புக்கரசிகளாய் வாழ்க்கைக் கடம்பூண்டு இல்லறத்தைச் செவ்வனே இனிது நடத்த வல்லவிகளாக முடியும்.

நமது நாட்டுப் பெண்மக்கள் கல்வியில் மட்டும் குறைவுடையவர்களாக இருக்கவில்லை. மற்றுமொரு பெரிய பேற்றை யிழந்து வருந்துகிறார்கள். இக்குறைவாலேயே நம்நாடு கேவல நிலைமையை யடையக் காரணமாகின்றது. அக்குறை மணக்குறையே யாம்

நம் நாட்டினர் பெண்களை, மணப்பருவம் வருமுன்னரே பெண்களால் முன்பின் அறியப்படாத ஓர் ஆடவனிடத்திற் கொண்டுபோய்க் கவிழ்த்து விடுகிறார்கள். மணவிஷயத்தில் மணமகளின் மனமறிந்து செய்யவேண்டும் என்னும் எண்ணமே நம்மவர்க்குள் இல்லை. முற்காலத்தில் நெறிதவறிய பெண்களைக் கண்ணைக்கட்டிக் காட்டில் விடுவதாகவும், வறுமைதீரும் நிமித்தம் பெண்களை விற்பதாகவும் வழக்கங்கள் இருந்து வந்ததாகக் கேள்விப்படுகிறோம் அல்லவா? அத்துடன் ஒப்பிடலாம் இந்த மணவினையின் மாட்சிமை. மணத்தின் பின்னர் மனமொத்து இன்ப துன்பங்களைப் பங்கிட்டு அனுபவிக்க வேண்டியவர்களின் மனச் சம்மதத்தை யெதிர்பாராமலே செய்யும் மணம் மாட்சிமை யடையுமா? அந்தோ! பெற்றோர்கள் தம்மக்களுக்கு இவ்விஷயத்தில் செய்வது மிக்க தீமையாகவே முடிகிறது. ஒரு பெண் மணப்பருவம் வருமுன்னரே கணவனிடத்தில் அடைக்கப்படுகிறாள்; கணவனோ முன்னாலறியப் படாதவன்; மணத்தின் பின்னரே மணவாளன் முகத்தைப் பார்க்கலாமென்றால் மணவாளன் ஒழுக்கத்தை எங்ஙனம் உணர்ந்து தன் மனதுக்கேற்றவனே யென அறிய வல்லவியாவள்; இவர்க்குள் ஒற்றுமை யெங்ஙனம் உண்டாகும்?

மணம் என்பதற்குக் கூட்டம் என்பது பொருள். ஆகவே, மணமாவது ஒரு பெண்ணும் ஒரு ஆடவனும் மனமொத்துக் கூடுங்கூட்டமாம். இக்கூட்டம் அவ்விருவரும் தம்முள் காதல் கொண்ட பின்னரே நிகழக் கூடியது. எனவே, இம்மணம் பெண்ணும் ஆடவனும் விருப்பங்கொண்ட காலத்துத் தான் நிகழவேண்டும். காதல் என்பதை யறியாப் பருவத்துக் காதலனுங் காதலியுமாவது பொருந்துமா? இல்வாழ்க்கையை யின்னதென அறியாப் பருவத்திலேயே யில்வாழ்க்கையை நடத்த முன்வரலாமா? அறியா இளம் பருவத்து விவாகம் சிறுவர்களின் பொம்மை விளையாட்டுப் போன்றதன்றோ?

இவ்வாறு முன்பின் அறியா இருமணமக்களின் விவாகத்தாலும், குழவிப்பருவ விவாகத்தாலும், விவாகத்தின் பின்னர் நிகழும் கொடுமைகள் பல. பெற்றோர்கள் மண ஆசையாலோ வற்புறுத்தலினாலோ பெண்ணின் விருப்பத்தைக் கேட்காமல் ஒருவனுக்கு மணஞ்செய்து வைப்பதால், அப்பெண் வாழ்நாள் முழுதும் வருந்தவேண்டியவளாகிறாள். இருவருந் தமது வாழ்க்கையை யினிது நடத்தவேண்டும் எனவெண்ணி நடத்தும் மணம் இருவருக்குமாவது, இருவருக்குள் ஒருவருக்காவது பேராபத்தை யுண்டுபண்ணி விடுகிறது என்றால், இவ்விவாகத்தால் எய்தும் நன்மை யென்ன?

நம் நாட்டுப் பெண்களுக்குப் படிப்புவேண்டும் எனக் கற்பிக்கும் ஆவலுடையாரில்லை. தற்காலத்தில் சில பெண்களுடைய பெற்றோர்கள் படிப்பிக்க ஆவலுடையவராய்ப் படிப்பிபினும், பெண்களின் பாடசாலையின் படிப்பு முறையோ பொருத்தமானதன்று. பெண்களின் விருப்பத்தை யறிந்தும் விவாகத்தை நடப்பிப்பதில்லை எனில்,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"



என ஆன்றோர் கூறியவாறு ஒரு பெண் இருக்க இயலுமா? பெண்கள் கல்வி யறிவில்லாக்குறையால், கணவனிடம் ஒத்துவாழும் முறையை யறியாள்; மாமி மாமன்மாரிடம் ஒழுகும் வழியும் போஷிக்கும் வகையுங்காணாள்; தனக்குக் குடும்பத்தை யினிது நடத்தும் முறையுந் தெரியாது மாமியாரோ மருமகளைத் தன் மகளெனப் பாவிக்காமல் வேலைக்காரியெனப் பாவிக்கிறாள். இக்கேடுகள் நம்மவரிடமின்று நீங்குங் காலம் எதுவோ?

இன்னும், சில பெண்கள் கணவரை விரும்பினாலும், கணவர்கள் இவரை விரும்புவதில்லை. ஒருக்கால் கணவன் விரும்பி இனிது நடத்தினும் அவ்வாழ்க்கை அப்பெண்ணின் மாமிக்குப் பிடிப்பதில்லை; தன் மகன் தனது மருமகளை வேலைக்காரி யெனவே பாவிக்கவேண்டும் என விரும்புகிறாள். மருமகளைத் தூற்ற ஆரம்பிக்கிறாள்; மகனுக்கு மருந்து போட்டு மயக்கிவிட்டாள் என்கிறாள்; அயல்வீட்டுப் பெண்களிடம் இதனைச் சொல்லாமல் இருக்க அறியாள். இத்தகைய நிலையில் இருப்பதால் மகனாலும் மருமகளாலும் அவள் வெறுக்கப்படுகிறாள். இத்துணையும் நேர்வது கல்விக் குறைவாலேயாம் அன்றோ?

பாலிய விவாகத்தால், ருதுவாகுமுன்னரே கணவனை யிழந்து கைம்பெண்களாக நிற்கும் கணக்கற்ற பெண்களைக் காண்கிறோம். அங்ஙனங் கணவரையிழவாதிருப்பினும், காதலை யின்னதென அறியாப் பருவத்தே விவாகமானதால், காதலை யறிந்தபின்னர் மனமொவ்வாமற் கெடும் பெண்களையுங் காண்கிறோம். இவற்றைக் கண்டும் அனுபவித்துங்கூட இன்னும் இத்தகைய விவாகங்களை நடத்தலாமா?

வாழ்க்கை நலம் இனிது நிகழவேண்டுமானால், பெண் மக்களுக்குக் கல்விவேண்டும்; கணவனை யறிந்து ஒழுகும் விவேகமுடையவர்களாக இருக்கவேண்டும். கணவர்களுந் தம் மனைவியரைத் தமது கண்ணெனப் பாவிக்கவேண்டும்; தாம்வேறு அவர்கள் வேறு என்ற எண்ணமே கூடாது. பெரியோர்கள், 'இருதலைப் புள்' ளெனவும், 'ஆவிற்கு இருகோடு போன்று' எனவும் இருக்கவேண்டியவர் மணமக்கள் என்கின்றனர். கல்வி யறிவிருந்தால் மட்டும் 'மாமி கொடுமை' என்ற வாசகம் நம் நாட்டில் தலைகாட்டாதோடும். இத்தகைய நலன் பெருக எல்லாம்வல்ல முருகனருள் இனிது பெருக.

ஐ. இராஜூ முதலியார்,
பவிநந்தவல்லி.

## கற்பு.

(௱எசு-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவகாதர சகோதரிகளே! இக்கட்டுரையை தொடர்ச்சியாகத் தத்தம் கிரகத்திலுள்ள ஏனைய பெண்பாலர்கள் செவியுற செய்விக்குமாறு தங்களன்பை பிரார்த்திக்கின்றேன்

"மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு
இடம்படக் கற்புக் காவலே"

மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னப்பட்ட நான்கு குணங்களும் கற்பு என்ற பயிரை காவல் செய்யும் நான்கு வேலிகளாகும். எவ்வாறு ஓர் பயிர் விலங்கு முதலியவைகளால் பாதிக்கப்படாமல் வளம்பெற வளரவேண்டுமாயின் நான்கு புறங்களிலும் நான்கு வேலிகளோ? மதில்களோ அதில் சூழ்ந்திருக்கவேண்டுவது அவசியமாவதைப்போல், கற்பு என்ற பயிரை காவந்து செய்யவேண்டுமாயின் மேற்கூறிய நான்கு குணங்களையும் நலத்திற் மிகுந்த நங்கைமார்கள் நாடியிருக்கவேண்டிய தவசியமாகும். இன்றேல், நான்கு வேலிகளில் ஏதாவதொன்று பழுதானாலும் அதன்மூலமாக மிருகங்கள் புகுந்து எவ்வாறு பயிர்களை நிர்மூலமாக்கி விடுகின்றனவோ அவ்வாறே நான்கு குணங்களில் ஏதாவதொன்றில் சிறிது தவறினாலும் அதன் வியாபகமாக காமுகர்களென்னப்பட்ட காளையர்கள் புகுந்து கற்பு என்ற பயிரை நாஸ்தியாக்கி விடுவார்கள். ஆனதுபற்றியே நான்கு குணங்களையும் அறிவாளிகள் வெகு அழகுபடுத்திக் கூறி இருக்கிறார்கள். அவர்களி லொருவனாகிய புகழேந்திப் புலவர் நளவெண்பாவில்

"நாற்குணமும் நாற்படையா
ஐம்புலனும் நல்லமைச்சா
ஆற்கும் சிலம்பேயணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணாய் வதனமதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மையரசு"

அதாவது பகைவர்களாலும் கள்வர்களாலும் யாதொரு ஹானியும் ஏற்படாது குடிகளை ரக்ஷித்துவர படைக்கருவிகளோடும் மந்திரிகளோடும் பரிபாலனஞ் செய்து வருகிற ஓர் அரசனைப்போல், கற்பு என்ற ராஜ்யத்தை வழுவின்றி காப்பாற்றி வருகிற பெண்களுக்கு மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும், இரதகஜ துரகபதாதிகளென்ற சதுர்வித சேனைகளாகவும் லப்த, ஸ்பரிச, ரூப,

ரச, கந்தமென்ற ஐம்புலன்களும் பஞ்ச அமைச்சர்களாகவும் தம் பாதத்தில் பூண்டிருக்கும் சிலம்பே முரசாகவும், இரண்டு நேத்திரங்களே வாள், வேல் என்னப்பட்ட இரண்டு ஆயுதங்களாகவும் வசீகரம் பொருந்திய முகமே குடையாகவும் பாவித்து நடக்கவேண்டுமென்று நவின்றுளார். ஆகவே அத்தகைய அருங்குணங்கள் நான்கையும் சிறிது விரித்துரைத்து மேல் செல்லுவாம்.

மடம் :—பேதமை என்பது மாதர்க்கணிகலம்,

எனப் பகர்ந்த பாட்டியின் பாசுரப்படி மாதர்கள் தாங்கள் எவ்வளவு அறிந்தவர்களாய் இருந்தாலும் ஒன்றும் அறியாதவர்கள் போல் அடங்கி இருத்தல் மடமெனப்படும். இவ்வாறு இருப்பின் மாதர்கள் அடக்கமுள்ளவர்களாகி வீண் கெர்வமின்றி அனுவசியமாய் அன்னியரிடம் ஏற்படும் சகல விவகாரங்களையும் அவைகளால் உண்டாகும் தீங்குகளையும் விலக்கிக் கொள்ளும் திறமையுடையவர்களாகின்றார்கள்.

நாணம் :—

"பெண்மைக்கணி யென்ப நாணம்"

"நாணின்வரை நிற்பர் நற்பெண்டிர்"

என்றபடி தங்களுடைய புருஷர்களல்லாத மற்ற அன்னியர்களுடைய முகங்களைப் பார்க்க வெட்கப்படுதல் நாணம் எனப்படுகின்றது. இக்குணத்தால் அன்னியர்களிடத்தில் ஏற்படும் சகல விவகாரங்களினின்றும் தீங்குகளினின்றும் விலகிக்கொள்ளும் திறமையுடையவர்களாகின்றார்கள்.

அச்சம் :—தான் எப்போதும் செய்திராத யாதொரு தீய காரியத்தையும் புதிதாக செய்வதற்கு அஞ்சுதல் அச்சமென்னப்படும். இச்சிறந்த நற்குணத்தால் மாதர்கள் தாங்கள் இதுவரையில் செய்திராத பாவச் செயலைப் புதிதாகச் செய்வதற்குப் பயப்பட்டு புண்ணிய காரியங்களையே செய்யவேண்டியவர்களாகவும் மாமி, நாத்தி முதலியோர்களிடமிருந்து நற்பெயர் வாங்கும் தன்மையுடையவர்களாகவு மாகின்றார்கள்.

பயிர்ப்பு :—

"கூசிநில்ல நில்லாக் குலக்கொடியும்
கூசிய வேசியும் கெட்டுவிடும்"

என்றபடி தன் கணவனல்லாத மற்றவர்களுடைய அவயுவங்கள் தன்மீது பட்டால் உடம்பு கூசுதல் அதாவது அருவருத்தல் பயிர்ப்பு என்னப்படுகின்றது. இக்குணத்தால் மாதர்கள் அன்னிய புருஷனிடத்திலுண்டாகும் எவ்வித ஸ்பரிச சம்பந்தங்களால் ஏற்படும் கெடுதிகளையும் விலக்கிக்கொள்ளும் சக்தியுடையவர்களாகின்றார்கள்.

உண்ணல் உறங்கல் :—

"கொழுநனுண்டபின் றுணுகர் கொள்கையும்
விழிதுயின் றபின் றுஞ்சலு மென்றயி
னெழுதன் முன்ன மெழுதலுமேயன்றே
பழுதில் கற்புடை பாவையர் செய்கையே"

(காசிகாண்டம்.)

அதாவது கணவன் ஆகாரமுண்டபின் தான் உண்ணுதலும் அவன் நித்திரை செய்தபின் தான் நித்திரை செய்தலும் அவன் நித்திரை விட்டு எழுந்திருப்பதன் முன்னே தனது மெல்லிய நித்திரையினின் றெழுந்திருப்பதுமே யல்லவா குற்றமில்லாத கற்புடைய பெண்களது செய்கைகளாகும். நற்குணமிகுந்த நங்கைமார்களே! இதற்கு திருஷ்டாந்தங் கூறக்கருதின், உலக மாந்தர்களுக்கு இல்லறத்தின் இயல்பை எளிதாய் நடத்தி நற்கதியடைந்த கற்பின் வழுவா காரிகையாகிய இல்லறமாதா வாசுகி அம்மாளேயாவார். அவ்வம்மையின் ஆத்மா விண்ணுலகேகுங்கால் பெரு நாவலர்

"அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாத பாவாய்— யடிவருடிப்
பின் றூங்கி முன்னெழும்பேதையே போதியோ
வென் றூங்கு மென்கண்ணிரா"

என்று அம்மையின் கல்யாண குணங்களைப் பற்றி வியந்து துக்கித்தார். என்பதை நாம் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ந்துபார்க்கின் உள்ளன்போடு கணவன் வார்த்தையை மீறாது அன்னமளித்து படுக்கை முதலியவைகளை தயாரித்து படுக்கைக்கு அழைத்து கால் முதலியவைகளை பிடித்து சிரமபரிகாரமாற்றி துயில் கொள்ளுமாறு செய்வித்து, பின்னர் தான் நாயகிகள் உண்டு உறங்கவேண்டு மென்றல்லவா புலப்படுகின்றது. ஆனால் தற்காலத்து தாய்மார்களோ? முன் தூங்கி பின்னெழும் பேறிவாளிகளாயும், கணவனுனவன் ஜீவனோபாயத்தை முன்னிட்ட விவகாரங்களை கவனித்து வர வெளியே சென்று அகத்தை வந்து அடைவதற்கு முன் விலாப்புடைக்க உண்டு உறங்கிவிடும் உமைபதிகளாயுமிருக்கின்றார்கள். என்னே கலியுகத்தின் கூற்று, அதிலும் நவீன நாகரீகத் தன்மையைத் தழுவிய தற்காலத்து தங்கைமார்கள் இதைக்கண்ணுரின் அல்லது செவியுரின் மிக்க வியப்பெய்துவர் அத்துடன் கீழ் வருவனவற்றை மேன்புல் மேய்வதைப் போல் வாசிப்பின் அல்லது கேட்பின் அவ்வியப்பு பன்மடங்கதிகமாகப் பரவி அடங்கொணு நகைப்பையுண்டு பண்ணுமென்பதை உரைக்க வேண்டுவதின்றும். அஃதாவது கற்புடைய கன்னியர்கள் கணவனையே கடவுளாகக் கருதி கருமங்கள் நிகழ்த்தல் வேண்டுமென்றும், மனோவாக்கு காயமென்கப்பட்ட திரிகரணங்களாலும் முறையே சிந்தித்து துதித்து வணங்கவேண்டு மென்பதாம். இஃது நம்போன்றவர்களின் வாக்கன்று பெருமை பொருந்திய இருக், யஜுர், சாமு, அதாவண எனபபட்ட நானகு வேதங்களின் நன்மொழி என்பதை (பக்த விஜயத்திலுள்ள குசேலோபாக்யானத்தில்) சுசீலை தன் கணவனுகிய குசேலமகாமுனிவரை நோக்கி

"மாசறு கற்பின் மடவால றனக்குலகுக்
கறுங் கொழுனனே யுலகம
ஆசறத் திகிக்கும் கடவுளுமன்னு
றென அறிய நான் மறை சொலும"

குற்றமற்ற கற்பினையுடைய மாதர்களுக்கு உலகமும அதனை இரட்சிக்கும் கடவுளும கணவர்களே எனறு நானகு வேதங்களும் கூறுவதால், எங்களை இரட்சககவேண்டுவது தங்களின் கடமை எனறு முறையிடுகிறாகள். அன்றியும்,

"குலமகட்கு தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வோாககு தந்தையும் தாயுமாம்- அறவோர்க்கு
அடிகளே தெய்வம அனைவோர்ககுமதெய்வம்
இலைமுகபபைம பூனிறை"

"குலமகட்கழகு கொழுநனைப் பேணுதல்"

"கருநெறிக கூந்தலார்க்குக் கணவரை வணங்குறே
யுரிய நற்றருமமாகும்.........................................
பருவரை பயந்த நஙகாய் பணித்து ஙமபாதம் போற்றி
புரியவிழ் மலர்கொவிப் பூசனை புரிதலாமால்"

(வாயு சங்கிதை) என்றும் ஆன்றோர்கள் அறைந்துளார்கள், ஆதலாற் கறபுடைய மாதாகள் நிதந் தெய்வங்களை வணங்காது கணவனையே கடவுளாக சிந்தித்து துதித்து வணஙக வேண்டும். இவ்வாறு கூறுவதால், தெய்வத்தை வணங்காது நாஸ்திகாகளாகி விடுங்களென்பது தாாப்பரியமன்று, சாஸ்திர விசாரணைக்குவேண்டிய சிரவண முதலியவைகளைச் செய்து ஆண்டவனை அனுகுவதற்கு அறிவின்மையால், பதிபக்தியே பகவத் பக்தி என்று உள்ளன்போடு தொழுதால்

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெயயு மழை"

என்ற தமிழ் மறையின்படி தபோதனர்கள் முதலிய பெரியோர்களாலும் பெறுதர்க்கரிய சர்வ சக்திகளையும் அடைகின்றார்கள். ஆகையால்

"கதிரெழுந்திடுமுன் கணவனைத் தொழுதெழுந்து
இதமுற சௌசாதி விதிமுறியியற்றி
பதிநலம்பெற பற்பல பணியினி தாற்றல்
துதிபுரிந்திடும் கற்புடை தோகையர் செய்கையே"

என்றபடி சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்திருந்து கணவனைச்சிந்தித்துத் துதித்துச் சாஷ்டாங்க நமஸ்காரம் செயதுவிட்டு, பின் சௌசாதி முதலியவைகளை முடித்து, நாயகன் நனமையை நாடுவதற்குவேணடிய நற்கிரிகைகளைச் செய்தல் உலகத்தோா கறபுடையவள் என போற்றும் பெண்டிாகளது கடமையாகும்.

நவீன நாகரீகக் கடலில் மூழ்கிய நங்கையர்களே?

மனைவிகளை தங்கள் பெண்தெய்வமாக (My Goddess) வணங்கும் இக்காலததும், புருடர்களை தெய்வமாக பாவிக்கவேண்டுமென்பதைத் தான் மிகக வியப்பென்றேன், இவ்வியப்பெய்துவோர் செவியில் இக்கட்டுரை நாராசங்காய்ச் சிவிட்டதும்போல இருக்கும். 1942ம் ஆண்டில் கோலாலமபூரில் வெளியான "தமிழகம, என்ற பேப்ப ல ஒரு நணபா, மாதர்நீதி" எனற வியாசததில் மனைவி கணவனைத் தெய்வமாக பாவிக்க வேணடுமென்று வரைநதிருந்ததைக் கண்ணுற்ற ஓர் பெணபால், அப்படியாயின் கணவனும் மனைவியை தெய்வமாக கருதவேண்டுமென்று மறுபபு எழுதி இருநததாக ஆனநதபோதினி என்ற சஞ்சிகையில பிரசுரிக்கபபட்டிருநதது.

சகோரிகளே,

இதற்குக் காரணம், கல்வியறிவொழுக்கமில்லா அறியமையே, பண்டைய நீதி நூல்களையும புராணங்களையும் ஆராயந்தால் இதற்கு அநேக திருஷ்டாநதஙகள புலபபடும்.

வாய்மையே ஓர் வடிவமாக அவதரித்த அரிச்சநதிர மகாவள்ளல் சத்தியத்தை நிலைநிறுத்துவான் கருதி, தன் நாடு நகரம் பெண்டீர் பிளளைகளெல்லாம் இழநது, தானும் ஓர் புலைய

னுக்கு அடிமையாகி மயானத்தில் அடிமைத் தொழில் பூண்டிருந்தபோது விஸ்வாமித்திரனின் மாய்கையால் இறந்துகிடந்த காசி மகாராஜன் குழந்தையை தன் குழந்தையென உன்னி பரிதபித்துக் கொண்டிருந்த கற்புநிலை பிறழாத காரிகையாகிய சந்திரமதியின்மீது அக்குழந்தையைக் கொன்ருள் என்ற குற்றத்தை சுமத்தி நிரபராதியான அவ்வம்மையைக் கொலை செய்யுமாறு காசிராஜன் அரிச்சந்திரனுகிய புலையனுக்கு உத்தரவளித்தான். அவ்வுத்தரவை சிரமேறகொண்ட அரிச்சந்திரன் கூறிய வாளைக் கரததிலேந்தி சந்திரமதியை நோக்கி

''வழக்கமாக வழிபடு தெய்வத்தை வணங்கி
கிழக்குநோக்கி யீண்டிருவென கிளிமொழி மடந்தை
பழக்கமான வக்கணவனைப் பாவி யென்னுவி
இழக்கற் கஞ்சி நீ யறம்வழுவேலென வியம்பும்''

(அரிச்சந்திரபுராணம்.)

ஹே சந்திரமதி நீ வழக்கமாக வணங்கக்கூடிய கடவுளை வணங்கிக்கொண்டு கிழக்கு முகமாக நோக்கி இஙகு இருவென்று சொல்லவே, அதற்கு கிளிபோன்ற சொல்லையுடைய சந்திரமதியானவள் தான் எப்பொழுதும பழக்கமாகத் தொழுது வரக்கூடிய தன் நாயகனுகிய அரிச்சந்திரனையே கடவுளாகக் கருதி வணங்கி நின்று கொண்டு அடியேனுடைய உயிரிழந்து போவதற்குப் பயந்து நீர உமமுடைய தருமததை வழுவாமற் காப்பாற்றுமென்று கூறினுள்.

அறமதை வளர்க்கும் அன்னையர்களே!

இதில் ஓர் அரிய விஷயத்தை உங்களுக்கு அறிவிக்க என் மனம் அவாவுகின்றது. அதாவது நிரபராதியான ஓா பெண்ணின் சிரத்தை வெட்டப்போகும் அச்சமயத்தில் கடவுளை வணங்கி நில் என்று கூறியதாம். அதன் கருத்து யாதோவெனில

"மரிக்கும்போ தென்னும் வடிவினை யாவி
பரிகு நினைவு பரித்து, ஆதலிருந்
சுற்றத்தவரை நினையாத பாலன்
பாத நினைக பரிந்து"

(சோமவார விரத கற்பம்.)

அன்றியும், பகவத்கீதை அ.-8, சு. 5-ல் கிருஷ்ணபரமாத்மா "ஹே கௌந்தேயா, எவனொருவன் சரீரத்தைவிட்டு வெளிப்படும்போது என்னையே ஸ்மரித்தவனுய் செல்கின்ருனே அவன் என்னுடைய ஸ்வரூபத்தையடைகின்ருன. அது விஷயத்தில் சநதேகமின்ரும். மரணந்த காலத்தில் எநதெந்த பாவத்தை ஸ்மரித்துச் செல்கிருர்களோ அவர்கள் சதா அந்த பாவத்தையே சிந்தித்தவர்களாய் அந்தந்த பாவத்தையே அடைகிருர்கள். ஆகையால் எக்காலத்தும் என்னையே சிந்தித்தவனுய் யுத்தஞ்செய்'' எனத்திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அதாவது அவாவே பிறவிக்கு வித்து. ஆதலால் சரீரம் நீங்கும்பொழுது யாதொரு அன்னிய பொருளையும் அவாவாமல் கடவுளுடைய திருவடி தியானத்தோடு செல்லும் பக்ஷத்தில் அவ்வாத்மா நற்கதியடையுமென்பது ஆன்ருேர் துணிபு. ஆனுல் அக்காலத்து அத் தியானமுண்டாவது இடைவிடா ஈஸ்வரபக்தி யுடையார்க்கன்றி ஏனையோர்களுக் கியலாதாகையால் அவர்களுக்கு ஞாபகமூட்டுவான் கருதி, கடவுளுடைய திருவுருப் படங்களை நேத்திரத்தின் முன் காட்டுவதும், தமிழ் வேதமாகிய திருவாசகத்தை செவியாற்கேட்டு சிந்திக்கும்படி ஓதுதலும் முன்னேர்கள் நடத்துமுறை. அதையுணராதவர்கள் ஆத்மா பிரியுங்காலத்து செல்லும் ஆத்மாவானது ஈசன் திருவடியடைகுக. நற்கெதியாகுக, சாந்தியாகுக என்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி சிலநிமிஷம் அஞ்சலியஸ்தர்களாய் நின்று துதிக்கவேண்டும். இத் தத்துவங்களை உணராத சில மாதர்கள், பிராணன் பிரியுங் காலத்து போடுங் கூச்சலினுலும் ஆடும் ஆர்ப்பாட்டங்களினுலும் அவ்வாத்மாவின் பிரிவு அவதியுடன் அடையுமென்பதில் ஐயமுளதோ? பின்னும் ஆங்குவந்து அணைவோர்களுக்கெல்லாம் அவர்கள துக்கத்தை அறிவிப்பதுபோல் தொண்டை உறமுள்ளவரையில், வெகுநாள் பட்டினி கிடந்து அறிய ஒப்புயர்வற்ற ஒப்பாரி கண்ணிகளையெல்லாம் ஓயாமல் உரைப்பதும் அவைகளில் நவீனமாக உள்ளவைகளை மனனஞ் செய்துக்கொள்ள வந்து மௌனஞ் சாதித்துக்கொண்டிருக்கும் மாதர்களின் மாண்பையும் என்னென்றியம்புவது. சகோதரிகளே இத் துர் அப்பியாசத்தை நீக்கி ஈசன் திருவடியைப் போற்றும் திருவாசகத்தின் அகவல் முதலியவைகளை மனஞ்செய்து ஓதுமாறு தங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

இத் தத்துவங்களோடு அறநெறியை அறிந்தவளாதலால் நம் சந்திரமதி ஆத்மா, அகலப் போகும் அவ்வமயத்தில், அன்புடனுரைத்த அரிச்சந்திரனின் அருள்மொழிப்படி தான் பழக்கமாய் தொழுதுவரும் தன நாயகனையே தெய்வமாக நாடி நின்ருளென்பது தெற்றெனப் புலப்படும். அவ்வாறெழுகினமையால் என்ன வாயிற்று?



"நெறியின் என்றனைவிடா நிறைவிட்டுளதேல்
இறுதியின்மையைப் பெறுக இல் லெனினி வளிறுதி
பெறுகவென்று வாள்வீசினன் பேதைதன் கழுத்தில்
மறுமணத் திமொலையாய் வீழ்ந்ததவ்வடிவாள்"

(அரிச்சந்திர புராணம்.)

அந்த மெய் சொல்லுகிற மார்க்கத்தையே விரதமாகக்கொண்ட என்னைவிட்டு நீங்காத நிறைமனம் இவளுக்குண்டாய் இருந்தால் இவள் சாவாமை பெறக்கடவது. அவையெல்லாமில்லை என்ருல் இவள் சாவப்பெறக்கடவது என்று அரிச்சந்திரன் வாளைக்கொண்டு வெட்டினுன். அப்போது வெட்டின அந்த அரிய வாளானது இரண்டாவது கலியாணததுக்கிட்ட மாலையாகிச் சந்திரமதி கழுத்திலே விழுந்தது.

நாதர்களின் நலத்தை நாடும் நங்கைமார்களே!

இத் திருஷ்டாந்தத்தால் கற்புடைய பெண்கள் தம் புருஷனுல் தமக்கு எத்தகைய ஆபத்துகள் வரினும் சிறிதும் அவைகளைப் பொருட்படுத்தாது அவர்களையே கடவுளாக கருதினுல் சகல சம்பத்துக்களையும் அடைவார்களென்று தெள்ளிதிற் புலனுகின்றது.

சி. தி. தாண்டவராயன்,
காரியதரிசி, ஸ்ரீ ஷண்முகானந்த சன்மார்க்க சங்கம்,
திருமருகல்.

12980

# செங்குந்தர் கிளர்ச்சி

## தலைச்சங்கத்தின் பிரசாரமும், அமைச்சரின் சுற்றுப் பிரயாணமும்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், கி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி ஆகிய மூன்று ஜில்லாக்களிலும் பிரசாரம செய்யும்பொருட்டு மே மாதம் 5-ம் தேதி சென்னையிலிருந்து புறப்பட்டுத் திருச்சி ஜில்லா கரூர் தாலுக்காவில் பிரசாரஞ் செய்யத் தொடங்கி செங்குந்த சகோதரர்களால் விமரிசையாய் மிக ஊக்கத்தோடு வரவேற்கப்பெற்றுச் 'செங்குந்தர் மகாநாடு ஒன்றை முதன் முதல் கூட்டக் கிளர்ச்சி செய்து கொண்டும், பலவிடங்களில் கிளைச்சங்கங்களை நிறுவிக்கொண்டும், 'செங்குந்த மித்திர'னுக்குச் சநதாதாரர்களைச் சேர்த்துக்கொண்டும் வருகின்றனா. இவர்கள் கூடிய சீக்கிரத்தில் தஞசை, தென்னுற்காடு ஜில்லாக்களிலும் பிரசாரம் செய்வர்.

### தஞ்சை ஜில்லாவில் பிரசாரம்.

#### சீர்காழி, கூறைநாடு.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில பிரசாரம் செய்யும் பொருட்டுத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சரும், 'செஙகுந்த மித்திரன்' பத்திரிகாசிரியருமாகிய திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல், டி., அவர்கள், மேற்படி சங்கத்தின் உதவிப்பொருட் காப்பாளருடன் மே மாதம் 23-ந்தேதி சென்னையிலிருந்து புறப்பட்டு 24-ந்தேதி காலை சிதம்பரத்தை அடைந்து காலை சந்திக்கட்டளை திரு. சிதம்பரநாத முதலியார் அவர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று, அந்நகர் செங்குந்த தலைவர்களாகிய திருவாளர்கள் இரும்பு வியாபாரம் குமாரசாமி முதலியார், நூல் வியாபாரம் அண்ணாமலை முதலியார், தாசில் பொன்னுசாமி முதலியார் முதலியவர்களைக் கண்டு, சங்கம் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, மறுநாள் காலை 7-மணிக்குச் சீர்காழியை அடைந்தனர். அங்கு ரயில்வே ஸ்டேஷனில் பிரசித்திபெற்ற சீர்காழி நாட்டாண்மை பூரண முதலியார் குமாரர் திரு. இராஜூ முதலியார், ஜவுளி திரு. தி. ரா. இராஜூ முதலியார், தமிழ்ப் பண்டிதர் திரு. அகோரம் பிள்ளை முதலிய பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்றனர். இச்சமயத்தில் குலப்பெருந்தொண்டராகிய காலஞ்சென்ற சீர்காழி நாட்டாண்மை உயர் திரு. பூரண முதலியாரவர்கள் இன்மை மிகவும் வருந்தற் பாலதேயாயினும். முதலியாரவர்கள் சுவீகாரப் புத்திரராகிய திரு. இராஜூ முதலியாரவர்கள் காட்டிய ஊக்கம் என்றும் மறக்கற்

பாலதன்று. பிரசாரகர்கள் அன்று திரு. ஆறுமுக முதலியார், சீர்காழி யூனியன் மெம்பர் சிங்கார முதலியார் முதலிய பல வியாபாரிகளைக்கண்டு பேசி சந்தா நேயர்களையும் சேர்த்துக்கொண்டு மறுநாள் கூறைநாட்டை அடைந்தனர். அவ்வூர் முனிஸிபல் கவுன்ஸிலரும் பிரபல வியாபாரியுமான திருவாளர் வீரப்ப முதலியாரவர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று மறுநாள் காலை மேற்படி முதலியாரவர்கள் தலைமையின்கீழ் அவ்வூர் பெரியதனக்காரரும் வியாபாரிகளும், கூடிய ஒரு கூட்டம் கூடிற்று. அப்போது திரு. ம. அ. கனகசபை முதலியாரும், திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களும் சமூக முன்னேற்றத்தின் பொருட்டுச் செய்ய வேண்டியவற்றைக் குறித்து உபந்நியாசம் செய்தனர். செங்குந்த மாணவர் விடுதிக்காக மகமை ஏற்பாடு செய்வதாகவும் தலைவரவர்களும் மற்ற வியாபாரிகளும் வாக்களித்தனர். சமூக முன்னேற்றத்தில் திரு. வீரப்ப முதலியாரவர்களும் அவர்கள் குமாரர் திரு. இரத்தின முதலியார் பி. ஏ. பி. எல். அவர்களும் காட்டிய ஊக்கம் மிகவும் பாராட்டத்தக்கது.

## திருநாகேஸ்வரம்.

பிரசாரகர்கள் 27-5-28 கூறைநாட்டைவிட்டு மாலை 3-மணிக்குத் திருநாகேசுவரம் வந்தனர். ரயில்வே ஸ்டேஷனில் திருவாளர்கள் ஷண்பகாரண்ணிய முதலியார், வேதாந்த முதலியார், ஆறுமுக முதலியார், முதலியவர்களால் வரவேற்கப் பெற்று, திருநாகேசுவரம் நாட்டாண்மை திரு. ந. பொன்னம்பல முதலியார் அவர்களாலும் உபசரிக்கப்பெற்றனர். திருநாகேசுவரத்தில் செங்குந்தர் மகாநாடு கூட்டவேண்டுமென்று அவ்வூரார் கொண்டிருந்த ஊக்கத்தை முன்னிட்டு நாட்டாண்மை திரு. பொன்னம்பல முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு ஆலோசனைக் கூட்டம் கூடிற்று. அப்போது தென்னிந்திய மகாஜன சங்கத்தின் மற்றொரு அமைச்சரும் திருவாரூர் முனிசிபல் கவுன்சிலரும் ஆகிய திரு. தி. நா. சபாபதி முதலியார், குல முன்னேற்றத்தில பேரவாக் கொண்டுள்ள திரு. கூறைநாடு இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்., திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., திரு. ம. அ. கனகசபை முதலியார் ஆகியவர்களும் அவ்வூர் பெரிய தனக்காரரவர்கள் பலரும் விஜயம் செய்திருந்தனர். அதில் இரண்டொரு மாதத்திற்கு முன்னரே செய்துள்ள ஏற்பாட்டின்படிக் கோயம்புத்தூர் ஜில்லாவில் மகாநாடு கூட்டுவதே உசிதமென்றும், அடுத்த மகாநாடு திருநாகேசுவரத்தில் கூட்டலாமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. இக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் புகைப்படமும் ஒன்று எடுக்கப்பெற்றது. அன்று மாலை 4-மணிக்குத் திரு. பொன்னம்பல முதலியார் தலைமையின்கீழ் அவ்வூர் செங்குந்த சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. அச்சமயம் திரு. தி. நா சபாபதி முதலியார் அவர்களும், திரு. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்களும் "நாம் இப்போது செய்ய வேண்டிய வேலை" என்பதைப் பற்றி அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

## திருச்சி ஜில்லாவில் பிரசாரம்.

### ஸ்ரீரங்கம், திருச்சி.

நாளது ஜூன் மாதம் முதல் தேதி அங்கிருந்து புறப்பட்டுச் சுவாமிமலை, திருவையாறு முதலிய இடங்களுக்குச் சென்று சந்தா நேயர்களைச் சேர்த்துக்கொண்டு மறுநாள் ஸ்ரீரங்கம் சென்று, திருவாளர்கள் சின்னு முதலியார், கணபதி முதலியார், கன்னியப்ப முதலியார், முதலிய பிரமுகர்களைக் கண்டு சங்கம் நிறுவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, மறுநாள் திருச்சிக்குச் சென்று திரு. வரதராஜ முதலியார், சென்னிமலை வேங்கடாசல முதலியார் முதலியவர்களைக் கண்டு செங்குந்த மித்திரனுக்குச் சந்தா நேயர்களைச் சேர்த்துக் கொண்டு 4-ந்தேதி மாலை 6-மணிக்கு மதுரையை அடைந்தனர். அங்கு பாலம் ஸ்டேஷனில் மதுரை செங்குந்த முதலியார் வாலிபச் சங்கத் தலைவராகிய திரு. பி. வி. முத்துக்கருப்ப முதலியார், திரு. வெள்ளைச்சாமி முதலியார், திரு. கந்தசாமி முதலியார் முதலிய பல குலாபிமானிகளால் மாலைகள் சூட்டி விமரிசையாய் வரவேற்கப் பெற்றனர்.

## மதுரையில் பிரசாரம்.

செங்குந்தர்களிடையே புத்துணர்ச்சியையுண்டாக்கி ஆங்காங்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு கிளைச்சங்கங்கள் நிறுவிச் செங்குந்தர் மகாநாடு கூட்டுவதற்கு வேண்டிய [illegible] பொருட்டு மதுரை, இராமநாதபுரம் [illegible] ஜில்லாக்களில் பிரசாரஞ் செய்யச் சென்னையிலிருந்து 23-5-28-ல்



புறப்பட்ட திரு. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் ஷை சங்கத்தின் உதவிப் பொருட் காப்பாளருடன் 4-6-28 மாலை 6-மணிக்கு மதுரையை அடைந்தனர். மதுரை பால ஸ்டேஷனில் மதுரைச் செங்குந்த முதலிமார் வாலிபர் சங்கத்தாரால் பூமாலை சூட்டி வரவேற்கப்பெற்றுப் பொதுவாகப் பொதுஜன ஊழியத்திலும் வெகு சிரத்தையாக உழைத்து வருபவரும், வைகையாற்றில் பொது நன்மைக்காக ஓடுகால் ஒன்று வெட்டி அதைப் பரிபாலித்து வருபவருமான திரு. S. R. சுந்தர முதலியார் அவர்களால் மிகவும் உபசரிக்கப்பெற்றனர். 6-6-28 தேதி மாலை 7-மணிக்குத் திருவாப்புடையார் கோயிலில் திரு. நாகப்ப முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. அச்சமயம் செங்குந்தமித்திரன் ஆசிரியர் திரு. ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T., அவர்கள் முயற்சியால் அவ்வூர்ச் செங்குந்த முதலிமார் சங்கமும், வாலிபர் சங்கமும் ஒன்றுபடுத்தப்பெற்றன. அவ்வாறு ஒன்று படுத்தப்பட்ட சங்கம் 'மதுரைச் செங்குந்தர் சங்கம்' எனப் பெயரிடப்பெற்று உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதன்றி அச்சங்கம் சென்னையிலுள்ள தலைச் சங்கத்திற்கு அங்கமாகவும் சேர்க்கப்பெற்றது. மதுரை முனிசிபாலிடியில் சமீபத்தில் காலியாகும் கவுன்சிலர் ஸ்தானத்திற்கு திரு. S. R. சுந்தர முதலியார் அவர்களை நியமிக்கவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வதாக திரு. S. சாலை முதலியார் அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பெற்று ஏகமனதாய் நிறைவேறிற்று. கூட்டம் இரவு 11-மணிக்கு இனிது கலைந்தது.

## இராமநாதபுரம் ஜில்லாவில் பிரசாரம்.

### இராமேஸ்வரம், பரமகுடி.

மறுநாட் காலை சங்கப் பிரதிநிதிகள் இராமேஸ்வரம் சென்று ஒப்புயர்வற்ற அக்ஷேத்திரத்தில் செங்குந்த முதலிமார்களுக்குப் பொதுவானதும் வெகு நாட்களாகக் கவனிப்பாரின்றி மிகவும் கேவல நிலையிலிருப்பதுமான முதலிமார் மடத்தைப் பார்வையிட்டனர். இம்மடம் தெற்குமாட வீதியில் கீழ்ப்பாகத்திலிருக்கிறது. இதைத் தங்கள் சக்திக் கேற்றவண்ணம் ஒருவாறு பாதுகாத்துவரும் மெய்யன்புளிச் செங்குந்தர்களுள் சிலரைக் கண்டு மடச்சம்பந்தமான விஷயங்களை விசாரித்துக்கொண்டு 8-6-28தேதி மாலை பரமக்குடியை யடைந்தனர். அங்கு ரெயில்வே ஸ்டேஷனில், திருவாளர்கள் வேலுசாமி முதலியார் முதலிய பல பிரமுகர்களால் மாலைகள் சூட்டி உபசரிக்கப்பெற்று, பிரபல இரங்கூன் வியாபாரியும், குலமுன்னேற்றத்தில் அடங்காத ஆர்வமுடையவரும், தர்மசிந்தையுள்ளவருமான திரு. ம. ப. இராமசாமி முதலியார் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றனர். ஷை முதலியார் அவர்களுடையவும், மற்றும் சிறந்த குலாபிமானமுள்ள பல செங்குந்த மக்களுடையவும் முயற்சியால் அன்றிரவு 9-மணிக்கு ஒருபொதுக்கூட்டம் கூடிற்று. திரு. ம. சண்முகசுந்தர முதலியார், M.A. L.T. திரு. மா. அ. கனகசபை முதலியார் இருவரும் குல முன்னேற்றம், பத்திரிகை, மாணவர் விடுதி முதலிய விஷயங்களைக் குறித்து உபந்யாசங்கள் செய்தார்கள். உடனே 'பரமக்குடி செங்குந்தர் சங்கம்' என ஒரு சங்கம் நிறுவப்பெற்று உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப் பெற்றனர். திரு. ம. ப. இராமசாமி முதலியார் அவர்கள் அப்போது குல முன்னேற்றத்தில் காட்டிய ஊக்கமும், பிரதிநிதிகளுக்குச் செய்த உதவியும் மிகவும் பாராட்டத்தக்கன. முதலியார் அவர்கள் சென்னையில் நிறுவ இருக்கும் செங்குந்தர் மாணவர் விடுதிக்கு வேண்டிய பொருளுதவி புரிவதாகவும் வாக்களித்துள்ளார். இரவு 12 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

## மண்டலமாணிக்கம்.

பிரசாரகர்கள் இருவரும் மறுநாட் காலை மண்டல மாணிக்கத்திற்குப் புறப்பட்டனர். இவ்வூருக்கு ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள கமுதியில் திரு. பாதம்பிரியா முதலியார், பாகவதர் வீராசாமியார் முதலிய பிரமுகர்களால் வரவேற்று அழைத்துச் செல்லப்பெற்றனர். மண்டலமாணிக்கத்தைச் சமீபித்ததும் குலாபிமானிகள் திரள் திரளாகவந்து எதிர்க்கொண்டு சங்கப் பிரதிநிதிகளின் வரவை ஒரு பெரு விழாவாகக் கொண்டாடினர். மோட்டாரில் ஷையாரை ஊர்வலமாக வாத்தியங்களுடன் ஆயிரக்கணக்கான ஜனங்களிடையே அழைத்துச் சென்றனர். 'சமூக ஊழியர்களே வருக வருக,' சண்முகசுந்தர முதலியார் நீடூழி வாழ்க' 'சமூகத் தலைவர்களே வருக வருக' 'செங்குந்த மித்திரன் வாழ்க' 'தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நீடூழி வாழ்க' என்பனபோன்ற பல மங்கள வாக்கியங்கள் பொறிக்கப்பெற்ற கொடிகளாலும், வளைவுகளாலும், ஊர் முழுதும் அலங்கரிக்கப் பெற்றி

ருந்தது. அவ்வூர் மாணவர்கள் அணியணியாகக் கொடிகள் பிடித்த கையராய் ஊர்வலமாய்ச் செல்லும் கூட்டத்தின் முன்னே வாழ்த்துப் பாடிச் சென்றனர். அவ்வூர்ச் செங்குந்தர் காட்டிய ஊக்கம் அளவிடற்பாலதன்று. பின்னர் தலைச்சங்கப் பிரதிநிதிகள் செங்குந்தர் மடத்தில் வரவேற்று உபசரிக்கப்பெற்றனர். அன்றிரவு 6-மணிக்குச் செங்குந்த குலதிலகமாகிய திரு. முத்துப் பண்டிதர் அவர்களால் ஜீர்ணோத்தாரணஞ் செய்யப்பெற்று இதுகாறும் அவர் பரம்பரையினரால் பரிபாலிக்கப் பெற்றுவரும் காசி விஸ்வநாதர் கோயிலுக்குச் சென்று தரிசனஞ் செய்துகொண்டு 6½ மணிக்கு செங்குந்தர் மடத்தில் கூடிய கூட்டத்திற்குப் போந்தனர். திரு. ம. சண்முகசுந்தர முதலியார், M.A., L.T., அவர்கள் தலைமை வகித்தார். முதலில் பிரதிநிதிகள் இருவரும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப் பெற்றனர். அவற்றிற்குப் பதில் அளிக்கப்பட்ட பிறகு, தலைவர் திரு. மா. அ. கனகசபை முதலியார், பாகவதர் வீராசாமியார் ஆகிய மூவரும் செங்குந்த சமூக சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அரிய உபந்யாசங்கள் செய்தனர். திருவாளர்கள் பாதம்பிரியா முதலியார், முத்துப் பண்டிதர் முதலிய பல பெரியோர்கள் காட்டிய ஊக்கம் பாராட்டற் தக்கது. அன்று சங்கப் பிரதிநிதிகள் வரவை அறிந்து அவர்களைத் தமதூருக்கு அழைத்துச் செல்லும்பொருட்டு அருப்புக்கோட்டை திரு. குழந்தைவேல் முதலியார் அவர்கள் வந்திருந்தனர். அவர்கள் கூடிய சீக்கிரம் இராமநாதபுரம், மதுரை ஜில்லாக்களில் தாமே சில நண்பர்களுடன் பிரசாரம் செய்து செங்குந்ர்வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் சங்கங்கள் நிறுவிப் புத்துணர்ச்சியை உண்டாக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தனர். சுயநலங் கருதாத இத்தகைய பெருந்தகையாளர் ஜில்லாவுக்கொருவராவது உழைக்க முன் வருவாராயின் செங்குந்த சமூகம் வெகு சீக்கிரம் முன்னேற்றமடையுமென்பதிற் சந்தேகமில்லை. அன்னார் முயற்சி நன்முயற்சி யாகுக. இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிதுமுடிந்தது.

## திருநெல்வேலி ஜில்லாவில் பிரசாரம்.

### தென்காசி, குற்றலம்.

மறுநாள் சங்கப்பிரதிநிதிகள் பரமகுடிக்குத் திரும்பி அநேக சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொண்டு 11-6-28 அன்று திருப்பரங்குன்றத்தை யடைந்து சிலரைக்கண்டுபேசி இந்தக்ஷேத்திரத்தைச் சூழ்ந்துள்ள 18 கிராமச் செங்குந்தர்களால் பரிபாலிக்கப்பெற்று வரும் முதலியார் மடத்தைப் பார்வையிட்டு 12-மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மாலை 5½-மணிக்குத் தென்காசிக்குச் சென்றனர். ரயில்வே ஸ்டேஷனில் தென்காசி செங்குந்தர்களால் வரவேற்கப்பெற்றுப் பிரசித்திபெற்ற வியாபாரியும், பெருந்தகையாளரும், செங்குந்தகுலம் விளங்கத்தோன்றியவரும், குலமுன்னேற்றமே முக்கிய நோக்கமாகக் கருதிப் பல்வகையாலும் உழைத்து வருபவருமான திரு. T.P.K ஆறுமுக முதலியார் அவர்கள் இல்லத்திற் றங்கியிருந்தனர் மறுநாட் காலை குற்றாலத்திற்குச் சென்று அங்கு தென்காசி முதலிமார்களால் பரிபாலிக்கப்பெற்று வருவதும், நீர்வீழ்ச்சிக்கும் குற்றாலநாதர் சந்நிதிக்கும் சமீபத்திலுள்ளதுமான செங்குந்தர் மடத்தைப் பார்வையிட்டுத் தென்காசிக்குத் திரும்பினர்.

### புளியங்குடி, சிந்தாமணி.

ஜுன்மீ 14உ திரு. குருசாமி முதலியார் அவர்களுடன் புளியங்குடிக்குச் சென்று பல பிரமுகர்களைக் கண்டு பேசி, மாலையில் அடுத்துள்ள சிந்தாமணி யென்னும் கிராமத்திற்குச் சென்று அச்சிந்தாமணிக்கோர் சிந்தாமணியாய் விளங்கும் உபயபாஷா சிரோமணி திரு. நயினார் முதலியார் அவர்களைக்கண்டு பேசி, சாது லக்ஷ்மணசாமி அவர்களையும் தரிசித்துக் கொண்டு, ஷை நயினார் முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் அன்றுஇரவு 8-மணிக்குப் புளியங்குடியில் கூடிய கூட்டத்தில் சங்கம், பத்திரிகை, முதலியவற்றைக் குறித்துச் சொற்பெருக்கிட்டனர். அப்போது 'புளியங்குடி சிந்தாமணிச் செங்குந்தர் சங்க'மென ஒரு சங்கம் நிறுவப்பெற்றது உத்தியோகஸ்தர்கள் மறுகூட்டத்தில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பெற்றது. 10½-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### சங்கரநாயனூர் கோவில்.

மறுநாட் காலை பிரதிநிதிகள் இருவரும் திரு. குருசாமி முதலியார் அவர்களுடன் சங்கர நாயனூர் கோவிலுக்குச் சென்று மிட்டாதார் திரு. முத்தைய முதலியார் அவர்களாலும், அவர் மைத்துனர் திரு. பரமமுத்து முதலியார் அவர்களாலும் வரவேற்று உபசரிக்கப்பெற்றனர். குந்தர் குலதிலகமும், உடல் தளர்ந்தும் ஊக்கம் தளராதவரும், திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், தேசிய ஊழியத்தில் விருத்த சிங்கமெனப் பேர் பெற்றவருமான திரு. S. பழனியாண்டி முதலியார் B.A., அவர்கள் சங்கப் பிரதிநிதிகள் திருநெல்வேலி ஜில்லாவிற்குப் பிரசார நிமித்தம் வந்திருப்பதை அறிந்து, அன்னார்க்கு உதவியாயிருந்து உடனுழைக்கவேண்டு மென்ற அவாமேலீட்டால் அவர்களை ஊர் ஊராகச் சென்று தேடி ஜுன்மீ 15உ இவ்வூருக்கு வருவதை யுணர்ந்து அவர்கள் வருவதற்கு முன்னரே அங்குவந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தனர். இப்பெரியார் சமூக முன்னேற்றத்தில் கொண்டுள்ள ஊக்கம் அளவிடற்பாலதன்று இப்பாகங்களில் கோயிலில் செய்யக்கூடிய மிக உயர்ந்த மரியாதையாகக் கருதப்படும் பட்டுக்கட்டுதலை சங்கர நாயினார் கோயிலில் மிட்டாதார் அவர்கள் பிரதிநிதிகளுக்குச்செய்வித்தனர். இரவு 9-மணிக்குத் தர்மர் கோயிலில் திரு. மிட்டாதார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. S. பழநியாண்டி முதலியார் B.A. அவர்களும் பிரதிநிதிகளும் செங்குந்த உலகத்திற்கு தலைச்சங்கம் செய்துவரும் வேலையைப்பற்றியும் அதற்கு ஒவ்வொரு செங்குந்தரது ஒத்துழைப்பு அவசிய மென்பதைப்பற்றியும் நீண்ட சொற்பொழிவுகள் செய்தனர். சுமார் 1000 ஜனங்களுக்குமேல் கூட்டத்திற்கு வந்திருந்தனர். அவ்வூரில் ஒரு சங்கம் நிறுவுவது அவசியமெனத் தீர்மானித்துக் கூடிய சீக்கிரம் அச்சங்கத்தை ஸ்தாபிப்பதற்கும் உத்தியோகஸ்தரை நியமிப்பதற்கும் 21 நபர்கள் கூடிய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பெற்றது. இரவு 11½-மணிக்குக் கூட்டம் கலைந்தது.



### தென்காசி.

ஜுன்மீ 16உ பிரதிநிதிகள் தென்காசிக்குத் திரும்பிவந்து அங்கு அன்று மாலை 7-மணிக்குத் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய பொதுக்கூட்டத்தில் செங்குந்தர் முன்னேற்றமடையும் முறைகளைப் பற்றி உபந்யசித்தனர். அப்போது தென்காசிச் செங்குந்தர் சங்கம் என ஒரு சங்கம் நிறுவப்பெற்று உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பெற்றனர். அச்சங்கம் தலைச்சங்கத்தோடு இணைக்கப்பெற்றது. திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் தென்காசி செங்குந்தர் சங்கத்துக்கு வாசக சாலைக்குவேண்டிய பத்திரிகை புத்தகம் முதலியவற்றைத் தருவித்து உதவுவதாக வாக்களித்திருக்கின்றனர். இதோடு அன்னார்நமது மாணவர் விடுதிக்கும்பெரும்பொருள் உதவுவதாக உறுதி கூறியிருக்கின்றனர். திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் பிரதிநிதிகள் பிரசாரம் செய்கிறவரையில் உடனிருந்து உழைக்க அவாவினராயினும், சில முக்கியமானவேலைகளை முன்னிட்டு அவ்வாறு செய்யமுடியாமையால், தமது சகோதரராகிய திரு. வேலாயுத முதலியார் அவர்களைத் தமக்குப்பதிலாக அனுப்பி வைத்துப் பேருதவி புரிந்தனர். அன்னார் பெருந்தகைமைக்குச் செங்குந்த உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அச்ஜில்லாவில் நடந்த பிரசாரம் பெரும்பாலும் முதலியார் அவர்கள் ஊக்கத்தினாலேயே நடந்ததென்பது மிகையாகாது.

### வீரவநல்லூர்.

வீரவநல்லூர் செங்குந்தர் அபிவிர்த்தி சங்கத்தார் 11-வது ஆண்டு நிறைவு விழாவிற்குத் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி. அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பிரதிநிதிகள் ஜுன்மீ 17உ காலை அவ்வூருக்குச் செல்ல ரெயில்வே ஸ்டேஷனில் திருவாளர்கள் வக்கீல் K. N. சுப்பிரமணிய முதலியார் B.A., திரு. ஆறுமுக முதலியார், திரு. சங்கர சுப்பிரமணிய முதலியார் B.A., B.L., முதலிய பல குலாபிமானிகளால் வரவேற்று உபசரிக்கப் பெற்றனர் நிகழ்ச்சி முறையிற் குறித்தபடி காலை 9-மணிக்கு 11-வது வருஷக்கூட்டம் திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. அப்போது தலைவர் அவர்கள் அச்சங்கத்தின் வரலாற்றையும், அது 11 வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டதற்குக் காரணபூதராயிருந்த திரு. பூமிநாத முதலியார் B.A., B.L. அவர்கள் செங்குந்தர் முன்னேற்றத்திற்காகச் செய்த அருந்தொண்டைப் பற்றியும் விரிவாகக் கூறிப் பிறகு சிவ சின்னங்களைப்பற்றி சம்பாஷணை செய்த மாணவர்களுக்குப் பரிசளித்தனர். கூட்டம் 11-மணிக்கு முடிவுபெற்றது. மறுபடியும் மாலை 5-மணிக்கு திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி., அவர்கள் தலைமையின்கீழ் ஆண்டு நிறைவுவிழா நடந்தது. அப்போது திருவாளர்கள் வக்கீல் K. N. சுப்பிரமணிய முதலியார்

பி.ஏ., பண்டிதர் முத்தைய முதலியார், கவிராயர் வீராசாமி முதலியார் திரு. சங்கர சுப்பிரமணிய முதலியார் பி.ஏ., பி.எல்., முதலிய பல அறிஞர்கள் பல அரிய விஷயங்களைக் குறித்து உபந்யாசம் செய்தார்கள் அன்று திரு. ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ., எல்.டி. அவர்கள் எதிர்பார்த்தபடி செய்த முடிவுரையானது மிகவும் போற்றத்தக்கது. செங்குந்தர் முன்னேற்றத்திற்கான அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. முடிவில் அம்பாசமுத்திரம் திரு சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பிரதிநிதிகளைத் தமதூருக்கு வருமாறு கேட்டுக்கொண்டனர். இரவு 9 மணிக்கு வருஷோற்சவம் இனிது முற்றுப்பெற்றது.

### பாபவிநாசம்.

ஜூன்மீ 18உ காலை பிரதிநிதிகள் இருவரும் வீரவநல்லூர் திரு. ஆறுமுக முதலியார், கவிராயர் வீராசாமி முதலியார் முதலிய பல பெரியோர்களுடன் அம்பாசமுத்திரம் ஸ்டேஷனில் திரு. கணபதி முதலியார் பி.ஏ., முதலிய பல அன்பர்களால் வரவேற்றுபசரிக்கப் பெற்றுப் பாபவிநாசத்திற்குச் சென்று அங்கு ஸ்ரீ பாபவிநாசேசுரர் ஆலயத்திற்கருகே அமைக்கப்பெற்று அம்பாசமுத்திரம் முதலிமார்களால் பரிபாலிக்கபெற்றுவரும் செங்குந்த மடத்தைப் பார்வையிட்டுக் கொண்டு அம்பாசமுத்திரம் வந்து திரு. கணபதி முதலியார் பி.ஏ., அவர்கள் இல்லத்திற்றங்கி யிருந்தனர்.

### அம்பாசமுத்திரம்

அம்பாசமுத்திரத்தில் அன்று மாலை செங்குந்தர்களால் பரிபாலிக்கப்பெற்று வரும் அகஸ்தியர் ஆலயத்தில் பிரதிநிதிகள் பட்டுகட்டுவிக்கப்பெற்றனர். இரவு 7-மணிக்குத் திரு. R. வேலாயுத முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருந்தனர். பிரசாரகர் இருவரும் ஒற்றுமை, சங்கத்தின் அவசியம் முதலியவற்றைக் குறித்து நீண்ட உபந்யாசங்கள் செய்தனர். பின்னர் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று மறு கூட்டத்தில் ஸ்தாபித்து உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பெறல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பெற்றது. சமூக முன்னேற்ற விஷயத்தில் திரு. R. வேலாயுத முதலியார், திரு. கணபதி முதலியார் பி.ஏ., திரு. பத்மநாப முதலியார் பிரமுகர்கள் காட்டிய ஊக்கம் மிகவும் பாராட்டத்தக்கது.

### கல்லிடைக்குறிச்சி

மறுநாள் (19-6-28) காலை பிரசாரகர்கள் தென்காசி, வீரவநல்லூர், அம்பாசமுத்திரம் முதலிய இடங்களிலிருந்து வந்த பெரியோர்களுடன் கல்லிடைக்குறிச்சிக்குச் சென்றனர். திருவாளர்கள் K. N. சுப்பிரமணிய முதலியார் பி.ஏ., சிதம்பர முதலியார், அகஸ்திய முதலியார் அவ்வூர்க்குந்தர் சிகாமணிகள் அனைவரும் இவர்கள் வரவை ஒருபெருவிழாவாக் கொண்டாடிப் போற்றினர். மாலை 6-மணிக்கு திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் பி.ஏ., அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் பிரதிநிதிகளும் தலைச்சங்க நிர்வாக சபையின் அங்கத்தினருள் ஒருவராகிய தருமபுரி திரு. தீர்த்தகிரி முதலியார் அவர்களும், கவிராயர் வீராசாமி முதலியார் அவர்களும் சமூக முன்னேற்ற சம்பந்தமான பல விஷயங்களைப் பற்றிப் சொற் பெருக்கிட்டனர். சென்னையிலுள்ள மாகாணசங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று இங்கு நிறுவப்பெற்று உத்தியோகஸ்தரும் நியமிக்கப்பெற்றனர். திரு. K. N. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெருமுயற்சியால் பிரசாரகர்களது வேலை இங்கு வெகு இலகுவாக்கப் பெற்றது. திருநெல்வேலிச் செங்குந்தர்களின் சார்பாக திரு. தீர்த்தகிரி முதலியார் அவர்கள் பிரதிநிதிகளை இங்கு வந்து வரவேற்றனர்.

### திருநெல்வேலி.

அடுத்த நாட்காலை (20-6-28) திருநெல்வேலி ஸ்டேஷனில் திரு. டி. பழநியாண்டி முதலியார் பி.ஏ., முதலிய அன்பர்களால் பிரதிநிதிகள் வரவேற்கப்பெற்று ஷை முதலியார் அவர்கள் இல்லத்திற்றங்கி இருந்தனர். அன்றிரவு 7-மணிக்குத் திருநெல்வேலி செங்குந்த மாணவர் சங்கத்தினரின் உண்மை முயற்சியால் முனிசிபல் கவுன்சிலரும், ஜில்லா போர்டு மெம்பரும் ஆகிய திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் பெரிய தெருவில் கூடிய கூட்டத்தில் திருவாளர்கள் ம. சண்முகசுந்தர முதலியார், மா. அ. கனகசபை முதலியார், தீர்த்தகிரி முதலியார் ஆகிய மூவரும் செங்குந்தர்களது முற்கால தற்கால நிலைமை, அவர்கள் முன்னேற்றமடையும் முறைகள் என்பவற்றைக்குறித்து அரும்பெரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். பின்னர் பல வருஷங்களுக்கு முன்னரே நிறுவப்பெற்றுள்ள செங்குந்தர் சங்கத்திற்கு இவ்வருடத்திய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பெற்று, அது சென்னையிலுள்ள தலைச்சங்கத்



தோடு இணைக்கப்பெற்றது. குல முன்னேற்றத்தில் மிகுந்த ஊக்கம் கொண்டவரும், பிரிபலஸ்தரும், பெருந்தகையாளரும், எடுத்த காரியத்தை இடைவிடாது முயன்று எண்ணியவாறே சாதிக்கவல்ல ஆற்றல் வாய்ந்தவருமான திரு. சிதம்பரநாத முதலியார் அவர்கள் அச்சங்கத்திற்குத் தலைவராக இருக்கச் சம்மதித்தது திருநெல்வேலிச் செங்குந்தர்கள் இனி அடையவிருக்கும் நன்மைக்கு நல்ல அறிகுறியென்றே சொல்லலாம். இப்பெரியார் இது வரையில் யாரோவென எண்ணியிருந்த சென்னை துரைத்தனத்தில் ஸ்தல சுயாட்சி இலாகா காரியதரிசி திரு. T. B. இராமச்சந்திர முதலியார் பி.ஏ., அவர்களுக்கும், அவர் சகோதரர் இராமநாதபுரம் ஜில்லா கல்வி இலாகா தலைவர் திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ. பி. எல்., அவர்களுக்கும் மைத்துனரெனக் கேள்வியுற்றுப் பிரதிநிதிகள் மிகுந்த சந்தோஷமடைந்தனர். ஷை முதலியார் அவர்களும் திரு. S. பழநியாண்டி முதலியார் பி.ஏ., அவர்களும் சங்கப் பிரதிநிதிகளுக்குச் செய்த உதவியும் உபசாரமும் என்றும் மறக்கற்பாலனவல்ல. பிரசாரகர்கள் வரவை எதிர்பார்த்து, இக்கூட்டம் கூட்டுவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து கடைசி வரையில் ஊக்கத்தோடுழைத்து அன்னார்க்கு வரவேற்புந் தந்த திருநெல்வேலி மாணவர் சங்கத்தார் நெறியை ஏனைய செங்குந்த வாலிபர்களும் மாணவர்களும் பின்பற்றுவாராக. கூட்டம் 11-மணிக்குக் கலைந்தது.

### கோட்டாறு.

ஜூன் 21உ திருவாளர்கள் ம. சண்முகசுந்தர ஷ்ஷ., மா. அ. கனகசபை ஷ்ஷ., தீர்த்தகிரி ஷ்ஷ. ஆகிய மூவரும் கோட்டாற்றையடைந்து திருவாளர்கள் பனனிருகைப் பெருமாள் முதலியார B.A., B.L., வேலாயுத முதலியார், ம.ஐ. முத்தையா முதலியார் B.A., முதலிய பல செங்குந்த சகோதரர்களால் வாழ்வுற உபசரிக்கப்பெற்றனர். அன்றிரவு 7-மணிக்கு ஸ்ரீ சென்றதிசைவென்ற விநாயகர் ஆலயத்தில் கூடிய பொதுக்கூட்டத்தில் மூவரும் செய்த உபந்யாசத்தில் அவ்வூர்ச் செங்குந்த சகோதரர்கள் கல்வி, செல்வம, வியாபாரம், நாகரீகம் முதலிய பல துறைகளிலும் மற்றைய ஜில்லாக்களிலுள்ள சகோதரர்களைக் காட்டிலும் முன்னேற்றமடைந்திருக்கிறபடியால் அவர்கள் இதர ஜில்லாக்களிலுள்ள சகோதரர்கள் முன்னேற்றமடையுமாறு உழைக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இரவு 3-மணிக்கு கூட்டம் கலைந்தது.

### திருச்செந்தூர்.

22உ யன்று திருச்செந்தூருக்குச் சென்று அங்கு தூண்டுவிநாயகர் ஆலயத்திற்குப் பின்பக்கத்திலுள்ள செங்குந்த முதலிமார் 48 கால் மண்டபத்தையும், அதன் இருபக்கங்களிலுமுள்ள செங்குந்தர் மடங்களையும் பார்வையிட்டனர். இவ்விரு மடங்களுள் வடக்குப்பக்கத்திலுள்ளது நல்ல நிலைமையிலிருக்கிறது. தெற்குப் பக்கத்திலுள்ளது இலனுயிருக்கிறது இவையிரண்டும் திருநெல்வேலி முதலியார்களால் பரிபாலிக்கப்பெற்று வருகின்றன. வடக்கு மாடவீதியில் விசாலமான இடம் எட்டியாபுரத்தைச் சார்ந்த 14 கிராமத்தார் பார்வையிலிருக்கிறது. இதில் மூன்று கட்டடங்கள் இருக்கின்றன. இவற்றுள் இரண்டு மடங்கள். மற்றொன்றில் அம்மடங்களைப் பார்த்துவரும் சங்... ஓதுவார் என்பவர் குடியிருந்து வருகிறார். மடத்துக் கட்டடங்கள் மிகத்தாழ்ந்தும் பழமையானவையாயு மிருக்கிறபடியால் கட்டடத்தைப் புதிதாய் சுவாமி வாகனத்தோடு வந்திறங்குமாறு உயர்த்திக் கட்டவேண்டு மென்றும் கற்றூண் முதலிய சாமான்கள் சேர்க்கப்பெற்று வருகின்றன இம்மடத்தைச் சார்ந்த எட்டியாபுர நாட்டார் ஆவணி பிரம்மோற்சவங்கட்கும் கொடிசீலை கொடுப்பதன்றிக் கடைசி உற்சவமாகிய 12-வது நாள் மண்டபபடியும் செய்துவருகின்றனர்.

### அருப்புக்கோட்டை.

மறுநாள் (24-6-28) பிரதிநிதிகள் 1½-மணிக்கு விருதுநகர் ஸ்டேஷனில் திருவாளர்கள் அருப்புக்கோட்டை குருசாமிப் பிள்ளை முதலியார், மண்டல மாணிக்கச் சங்கக் காரியதரிசி முனியப்ப முதலியார் அவர்களால் வரவேற்கப்பெற்று அருப்புக்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பெற்றனர். அவ்வூரார் இருவரையும் மோட்டாரிலிருத்தி ஆயிரக்கணக்கான ஜனங்களிடையே மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் சென்று கூட்டம்கூட ஏற்படுத்தியிருந்த இடத்தை யடைந்தனர். ஊர்வலம் ஆரம்பித்தது முதல் கூட்டம் முடிந்து தங்கள் விடுதியில் வந்து சேரும்வரையில் சூட்டிய மாலைகளால் சங்கப் பிரதிநிதிகள் மூடப்பெற்றனர். அவ்வூரிலுள்ள மற்ற இனத்தவர்களும் நம் முதலிமார்களோடு கலந்து நம் சங்கப்

பிரதிநிதிகளுக்கு மாலைகள் சூட்டியதன்றி கூட்டத்தில் கடைசிவரையில் இருந்து செங்குந்த சமூக முன்னேற்றத்தில் காட்டிய ஊக்கம் பெரிதும் கவனித்துப் பாராட்டத்தக்கது. இதனால் அங்குள்ள பல்லினத்தவர்க்குள்ளும் இருக்கும் ஒற்றுமை நன்கு விளக்குகிறது. திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்கப் பிரதிநிதிகளுக்கு வரவேற்புப் பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்கப்பெற்றது. தலைவர் அவர்கள் அதற்குத் தக்க பதிலுரைத்துச் செங்குந்தர் முன்னேற்றம் என்பதைப்பற்றி உபந்யசித்தனர். திரு. மா. அ. கனகசபை முதலியார் மாணவர் விடுதி, உபசார சம்பளம் முதலியவற்றைக் குறித்துப் பேசினார். மறுகூட்டத்தில் சங்கம் நிறுவுவதாகத் தீர்மானிக்கப் பெற்றுக் கூட்டம் கலைந்தது. மறுநாள் காலை திரு. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள் பழனிக்குச் சென்று அங்குள்ள நம்மவர் மடங்களைப் பார்வையிட்டுக்கொண்டு சென்னைக்குத் திரும்பிவிட்டனர்.

## மதுரைச் செங்குந்தர் வாசகசாலை.

ஜூன்மீ 24உ மாலை 7-மணிக்குத் தல்லாகுளம் செங்குந்த விநாயகர் ஆலயத்தில் செங்குந்தர் வாசகசாலை ஒன்று திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது. அதற்குத் திரு. கனகசபை முதலியார் செங்குந்தமித்திரனும் திரு. P. V. முத்துகருப்ப முதலியார் அவர்கள் திராவிடனும் வரவழைத்துக் கொடுப்பதாக வாக்களித்தனர். திரு. அங்குசாமி முதலியார் (மாணவர்) வாசகசாலைக் காப்பாளராக நியமிக்கப்பெற்றனர். அச்சமயம் திரு. மாணிக்க முதலியார் அவர்கள் (மதுரைச் செங்குந்தர் சங்கக் கூட்டுக் காரியதரிசி) ஒரு வியாசம் வாசித்தனர்.

மேற்குறித்த மூன்று ஜில்லாக்களிலும் உள்ள செங்குந்த சகோதரர்கள் சென்னைத் தலைச்சங்கத்தின் குலத்தொண்டை நன்கு மதித்து அதற்கு உடனிருந்து ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பது அவர்கள் காட்டிய ஊக்கத்தால் நன்கு விளங்குகிறது. வீரவநல்லூர் திரு. ஆறுமுக முதலியார் அவர்களும் திரு. சங்கர சுப்பிரமணிய முதலியார் அவர்களும், கவிராஜர் அவர்களும் சங்கப் பிரதிநிதிகளோடு ஆங்காங்கு சென்று செய்த உதவி ஈண்டு குறிப்பிடத்தக்கது. மாணவர் விடுதிக்கு உதவி செய்வதாகப் பல கனவான்கள் வாக்களித்தனர். (ஒரு நிருபர்.)

## திருச்சி ஜில்லாவில் பிரசாரம்

### கரூர்.

நமது சங்கப் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் திருவாரூரினின்றும் புறப்பட்டு 13-5-28 தேதி இரவு 9-மணிக்குத் திருச்சியை யடைந்தனர். மறுநாள் உறையூர், ஸ்ரீரங்கம், திருவானைக்கா முதலிய இடங்களுக்குச் சென்று 15-5-28 தேதி கரூரை யடைந்தனர்.

இவ்வூர்ச் செங்குந்த குல பிரபலஸ்தரும், பனியன் வியாபாரியுமான திரு. கு. நாச்சியப்ப முதலியார், திரு. ஆர். பழனியப்ப முதலியார் கே. தெ. ராமசாமி முதலியார் ஆகிய அன்பர்கள் பிரசாரகர்களை வரவேற்று உபசரித்தனர். அன்று மாலை 5-மணிக்குக் காமாட்சியம்மன் ஆலயத்தில் திரு. கோ. தெ. ராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் 'தொண்டு' என்பதைப்பற்றியும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் 'இந்தியாவில் சமூகங்களின் தற்கால நிலை' என்பதைப்பற்றியும், மிகத் தெளிவாகப் பேசியதின் பயனாகக் கரூர் செங்குந்தர் சங்கம் என்ற பெயரோடு ஒருகிளைச்சங்கம ஸ்தாபிக்கப்பட்டு தலைச்சங்கத்திற்கு வருடம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்பு, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. கோ. தெ. இராமசாமி முதலியார் தலைவராகவும், திரு. அ. சு. அருணாசல முதலியார், திரு. ஆர். பழனியப்ப முதலியார் இருவரும் காரியதரிசிகளாகவும், திரு. கு. நாச்சியப்ப முதலியார் பொக்கிஷதாரராகவும் நியமிக்கப்பட்டு நிர்வாக அங்கத்தினர்களும் எழுவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பிரதி அமாவாசையிலும் கூட்டங்கூட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. நமது செங்குந்த மித்திரனுக்கு 17 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். இரவு 10 மணிக்கு வந்தனோபசாரத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

### எலவனூர்.

16—5—28 தேதி காலை எலவனூருக்குப் பிரசாரகர்கள் சென்றனர், அவ்வூர்ப் பெரிய தனக்காரர்களும், நாட்டாண்மைக்காரரும், மற்றுமுள்ள செங்குந்த குல அறிஞர்களும்



மிக்க அன்போடு உபசரித்தனர். அன்று மாலை 3-மணிக்குக் காமாட்சியம்மன் ஆலயத்தில் கூடிய பொதுக்கூட்டத்திற்கு 200 செங்குந்தர்கட்கு மேல் வந்திருந்தனர். அச்சமயம் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் 'குந்தர் குலமும் கூத்தர் பெருமையும்' என்பது குறித்தும், திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'அரசாங்கத்தின் நடைமுறை' என்பது பற்றியும் உபந்யசித்தனர். செங்குந்த மித்திரனுக்கு 26 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். கரூரிலும் எலவனூரிலும் செங்குந்தர்கள் காட்டிய ஊக்கம் பெரிதும் போற்றற்பாலது. 18-5-28 தேதி கரூரில் நமது பிரதிநிதிகள் பிரபல வியாபாரி திரு. அ. அண்ணாமலை முதலியார், நெய் மண்டி திரு. வெள்ளைய முதலியார் இவர்களிடம் குல சம்பந்தமாகப் பேசியிருந்து விட்டு 18—5—27 மோகனூரை யடைந்தனர்.

### உன்னியூர்.

21-5-28 மாலை 7 மணிக்கு சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தின் பிரதிநிதிகளாகிய காஞ்சிபுரம் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார், திரு. தி. அ. சண்முக முதலியார் ஆகிய இருவரும் உன்னியூரை அடைந்தனர். அதற்கு முன்னரே அவ்வூர்ச் செங்குந்தர்கள் பெருந்திரளாகக் காளியம்மன் ஆலயத்தில் குழுமி நின்று பிரதிநிதிகளை வரவேற்றனர். உடனே அவர்களுக்குப் புட்ப மாலைகள் சூட்டிப் பல விருதுகளோடு பல வித வாத்தியங்களோடும் ஊர்வலமாகத் திரு. ஆர். மாணிக்க முதலியாரவர்களது கோடைகாலக் கொட்டகைக்கு அழைத்துச்சென்றனர். தெருக்களெல்லாம் தழைகளாலும், தோரணங்களாலும், கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சரியாக 7-மணிக்குக் கூட்டம் கடவுள் வாழ்த்துடன் துவக்கப்பட்டது. செங்குந்தத் தலைவர்களுக்கு ஜே! என்ற கோஷ்டம் எங்கும் நிறைந்திருந்தது. கூட்டத்திற்குத் திரு. ஆர். மாணிக்க முதலியாரவர்கள் தலைமை வகித்தனர். பிரதிநிதிகளுக்கு உடனே அவ்வூர்ச் செங்குந்தர் சற்போதன சங்கத்தாரின் சார்பாக திரு. பி. மாரியப்ப முதலியாரவர்களால் ஓர் வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிரதிநிதிகளின் சார்பாக திரு தி. அ. சண்முக முதலியாரவர்கள் பத்திரத்திற்குப் பதில் கூறினர். பின்பு தலைவரவர்கள் மகாஜன சங்கம் இதுவரை செய்துள்ள வேலைகளையும் நன்மைகளையும் குறித்து மிக நீண்டநேரம் எடுத்துக் கூறியபின் திரு பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டனர். பெருத்த கரகோஷத்தினிடையே 'செங்குந்தர்களுக்கோர் விண்ணப்பம்' என்ற பொருள்பற்றி 3-மணி நேரத்திற்கு மேலும் மாணிக்கவாசக முதலியாரவர்கள் பேசினர். திரு. மாரியப்ப முதலியாரவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்ட பின்பு மறுநாள் காலை 8-மணிக்கு அதே இடத்தில் அனைவரும் கூட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தலைவரவர்கள் கூட்டத்தைக் கலைத்தனர்.

22-5-28 காலை 8-மணிக்கு மீண்டும் திரு. ஆர். மாணிக்க முதலியாரவர்கள் தலைமையில் பெருங் கூட்டம் குழுமியது. தலைவரவர்கள் முன்னுரைக்குபின் பெருத்த ஆரவாரத்தினிடையே திரு. தி. அ. சண்முக முதலியாரவர்கள் எழுந்து 'நமது சீர்திருத்தம்' என்பது பற்றி 3 மணி நேரம் விரிவாகப் பேசினர். பின்பு திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்கள் 'சங்கத்தின் நோக்கமும் கடமையும்' என்பதுபற்றி நன்றாக விளக்கிக் கூறியதும் ஓர் செங்குந்தர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு திரு. ஆர். மாணிக்க முதலியாரவர்கள் தலைவராகவும், எம். ஆர். இரத்தினசாமி முதலியார், கே. எ. பாலசுப்பிரமணிய முதலியார் இவர்கள் உபதலைவர்களாகவும், திருவாளர்கள் பி. மாரியப்ப முதலியார், பி. கே. வீரப்ப முதலியார் இருவரும் காரியதரிசிகளாகவும், எ. கே. எஸ். சின்னசாமிமுதலியார் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு 9 நிர்வாக அங்கத்தினர்களும் நியமிக்கப்பட்டனர். பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

1. மெம்பர்கள் மாதம் 1-க்கு ஓரணா சந்தா செலுத்த வேண்டும்.

2. பிரதி தமிழ் மாத முதல் தேதியிலும் சங்கக் கூட்டம் நடைபெறவேண்டியது.

3. சங்கத்திலிருந்து ஐந்து ரூபாயும் தலைவரவர்கள் பத்து ரூபாயும் உபதலைவர்கள் தனித்தனி ஐந்து ரூபாயும் சேர்த்து மொத்தம் 25 ரூபாய் தலைச்சங்கத்திற்கு வருடந்தோறும் செலுத்தி வரவேண்டும். பின்பு செங்குந்த மித்திரனுக்கு 25 சந்தாதார்கள் சேர்ந்தனர். தலைவரவர்கள் முடிவுரை கூறியதும் தமிழ்ப் புலவர் திரு. கந்தசாமி முதலியார் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு மாலை 3-மணிக்கு ஜே! கோஷ்டத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது. பிரதிநிதிகள் இவ்வூருக்கு வந்தது

முதல் அவர்களிடம் பேரூக்கமும் உற்சாகமும் காட்டிக் கூட்டம் மிக சிறப்பாக நடைபெறுவதற்கும் ஏனைய செளகரியங்களெல்லாம் உண்டாவதற்கும் துணையாக நின்ற மிராசுதார் திரு. ஆர். மாணிக்க முதலியார், தமிழ்ப்புலவர் திரு கு. பெ. கந்தசாமி முதலியார், போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் திரு. பி. மாரியப்ப முதலியார், மிராசுதார் கு. ஆ. ஆனந்த முதலியார் இவர்கட்கு செங்குந்த உலகம் என்றும் மறவாநன்றி செலுத்தக் கடப்பாடுடையது.'

23-5-28-ல் பிரதிநிதிகள் மோகனூருக்குச் சென்றனர்.

### மோகனூர்

நமது சங்கப் பிரசாரகர்களாகிய திருவாளர்கள் பி. செ. மாணிக்கவாசக முதலியார், தி அ. சண்முக முதலியார் இவர்கள் உன்னியூரில் பிரசாரஞ்செய்துவிட்டு 23-5-28 தேதி காலை திருவாளர்கள் கு. பெ. கந்தசாமி முதலியார் பி. மாரியப்ப முதலியார் முதலிய உன்னியூர் அன்பர்களோடு மோகனூரை யடைந்தனர். அவ்வூர் 'செங்குந்தர்கள் மேளவாத்தியங்கள் முழங்கச் செங்குந்தத் தலைவர்களுக்கு ஜே' என்ற பெருங்கோஷ்டத்தோடு துர்க்காதேவி ஆலயத்தில் அவர்களை வரவேற்று ஊர்வலமாக திரௌபதியம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு இதற்கு முன்னரே ஒரு பெருங் கூட்டம் குழுமியிருந்தது. கூட்டத்திற்குத் திரு. ஜெகநாத ஐயரவர்கள் தலைமை வகித்து முன்னுரையாகச் செங்குந்தர்சங்கத்தின் அவசியத்தைக் குறித்தும், பிரதிநிதிகள்செய்துவரும் அருந்தொண்டினை ஆதரிக்கவேண்டிய கடமையைப்பற்றியும் இனிமை ததும்பும் இன்சொற்களால் தெளிவுபட விரித்துக் கூறினர். பின்பு அவ்வூர்ச் செங்குந்தர்களின் சார்பாகப் பிரதிநிதிகளுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அப்பத்திரத்திற்குப் பிரதிநிதிகள் பதில் கூறியபின்பு தலைவர்கள் அவர்கள் அனைவரும் மீண்டும் மாலை 3-மணிக்குக் கூடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கூட்டத்தைக் கலைத்தனர்.

மாலை 4 மணிக்கு அதே இடத்தில் ஒரு பெருங் கூட்டம் கூடியது. அக்கூட்டத்திற்கு திரு. தி. அ. சண்முகமுதலியார் ' செங்குந்தர் கடமை ' என்பதுபற்றியும், திரு. பி. சே. மாணிக்கவாசக முதலியார் 'ஒற்றுமையும் ஒழுக்கமும்' என்பது பற்றியும், நீண்ட சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இதன் பயனாக ஒரு செங்குந்வர்சங்கம் நிறுவப்பட்டு மிராசுதாரர் திரு. எம். ஆர். சபாபதி முதலியாரவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் மு. குழந்தைசாமி முதலியார் உப தலைவராகவும், கு. ல. சடையப்பமுதலியார், ச. கு. பழனியாண்டி முதலியார் காரியதரிசிகளாகவும், யூனியன் சேர்மன் பூ. பெ. முத்தசாமி முதலியார் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு இதர '6 நிர்வாக அங்கத்தினர்களும் நியமிக்கப்பட்டனர். வருடம் 1-க்குத் தலைச்சங்கத்திற்கு 15 ரூபாய் செலுத்தவேண்டுமென்றும், அங்கத்தினர்கள் மாதம் ஓரணா சந்தா செலுத்த வேண்டுமென்றும், பிரதி இங்கிலீஷ் மாத முதல் ஞாயிற்றுக் கிழமையும் கூட்டம் கூட்டவேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேறியபின் இரவு 10-மணிக்குத் தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. ஜெகநாத அய்யரவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டது. பின்பு திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பாக நன்றி செலுத்திய பின் கூட்டம் இனிது நிறைவேறியது. அவ்வூரில் பிரதிநிதிகள் தங்கியிருந்தபோது யூனியன் சேர்மன் திரு. முத்துசாமி முதலியாரவர்கள் செய்த உபசாரம் என்றும் போற்றற்குரியது.

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

நாளது விபவஞூ வைகாசிமீ 31௳ (13-6-28) இரவு 7-மணிக்கு உன்னியூர் செங்குந்தர் சங்கக்கூட்டம் திரு. R. மாணிக்க முதலியாரவர்களது இல்லத்தில் கூடியது. இக்கூட்டத்திற்குச் சங்கமெம்பர்களும் இதர செங்குந்தர்களுமாகச் சுமார் 200 ஜனங்கள்வரை குழுமியிருந்தனர். திரு. R. மாணிக்க முதலியார் தலைமை வகித்தார். நாட்டாண்மைக்காரர் திரு. மொ. மு சடையப்ப முதலியாரால் இன்னிசையோடு தேவாரம் பாடப்பெற்றது. பின்னர் முன்கூட்ட நடவடிக்கைகள் காரியதரிசியால் வாசித்துக் காட்டப்பட்டது. கல்வி என்னும் விஷயத்தைப்பற்றி திரு. கு. பெ. கந்தசாமி முதலியாராலும் ஒற்றுமை என்னும் விஷயத்தைப்பற்றி திரு ப. க வீரப்ப முதலியாராலும் உபந்நியாசிக்கப்பெற்றது. வாலிபரின் கடமை என்னும் விஷயத்தைப்பற்றி மாணவன் M. நல்லண்ணன் என்பவரால் ஒரு வியாசம் வாசிக்கப்பெற்றுப் பின் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—



1. இவ்வூரில் வதியும் ஏழைச் செங்குந்த மாணவர்களுக்கு இலவசமாய்ப் பாடசாலைப் புஸ்தகங்கள் வாங்கிக் கொடுப்பதெனவும், ஐந்து வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பெண் பிள்ளையையும்அவசியம் பாடசாலையில் சேர்ந்து வாசிக்கச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பெற்றது.

2. மூன்று மீட்டிங்குக்குக் சேர்ந்தாற் போல் வராத மெம்பர்களை மெம்பர் ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட வேண்டியதென தீர்மானிக்கப்பெற்றது.

3. இப்பொழுது வசூலித்துவரும் சங்கத் தொகை அணா இரண்டும், பல மெம்பர்களின் செளகரியத்தை உத்தேசித்து மாதம் ஒன்றுக்கு ஒரு அணா சந்தா செலுத்துவதாகவும் தீர்மானிக்கப்பெற்றது. பின்னர் சங்க மெம்பர்களிடமிருந்து சந்தா வசூலித்ததும் காரியதரிசி வந்தனோபசாரங் கூறிய பின் இரவு 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது என்று சங்க காரியதரிசி மாரியப்ப முதலியார் எழுதுகிறார்.

### வடஆற்காடு ஜில்லா, செய்யாறு தாலூகா.

### அசனமாபேட்டை செங்குந்த வாலிபர் சங்கம்.

19-5-28 மாலை 4-மணிக்கு இராமநாதீச்சுரர் ஆலயத்தில் செங்குந்தர் சங்கக்கூட்டம் கூட்டப்பட்டது. ஆண்டு சுமார் 100 ஜனங்கள் குழுமியிருந்தனர். திரு. சுந்தரமூர்த்தி முதலியாராலும், திரு. V. ஆரிமுத்து முதலியாராலும் தேவாரம் ஓதப்பெற்றது. அவ்வமயம் ஷை சங்கத்தின் தலைவரான திருவாளர் மே. தி. பொற்பாத முதலியார் அவர்கள் அவைத்தலைமை வகித்தனர். திருவாளர் சுந்தரமூர்த்தி முதலியார் என்னும் வாலிபர் கல்வி என்னும் விஷயத்தை வெகு விமரிசையாக உபந்நியசித்தார். பிறகு திருவாளர் V. ஆரிமுத்து முதலியார் "கல்வியும் செங்குந்தரும்", "சமாசம்," "நமது சங்கம்" என்ற அரிய விஷயங்களைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பிறகு திருவாளர் D. நரசிம்ம முதலியார் அவர்கள் எப்.ஏ., வகுப்பு மாணவர் "பெண் கலவி" என்ற விஷயத்தைப் பற்றி வெகு தெளிவாகப் பேசி முடித்தார். பிறகு V. ஆரிமுத்து முதலியார் அமாவாசையன்று எல்லோரும் வேலை நிறுத்தம் செய்து அன்று நடக்கும் சங்கத்துக்கு எல்லோரும் வந்து அரிய விஷயங்களைக் கேட்டும், தாம் முன் வந்து பேசியும் ஆனந்திக்குமாறு கொண்டு வந்த தீர்மானம் திரு. கந்தப்ப முதலியார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று எல்லோராலும் ஏகமனதாக நிறைவேறியது. பின்னர் அக்கிராசனரின் முடிவுரை நடந்ததும், காரியதரிசியவர்களின் சார்பாக V. ஆரிமுத்து முதலியார் அவைத் தலைவர்கட்கும் மற்றும் அங்கு விஜயஞ் செய்திருந்த பெரியார்கட்கும் வந்தனோபசாரங் கூறப்பெற்றுச் சங்கம் அன்றிரவு 9-மணிக்கு இனிது நிறைவேறியது.

17-6-28 மாலை 4-மணிக்கு இராமநாதீஸ்வரர் ஆலயத்தில் செங்குந்த குலமக்கள் பொதுக் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அதுசமயம் நமது குலமக்கள் சுமார் இருநூறு பேருக்கு மேல் கூடியிருந்தனர். அவ்வமயம் திருவாளர் திரு. கந்தப்ப முதலியார் அவர்கள் அவைத் தலைமை வகித்தனர். பிறகு V. ஆரிமுத்து முதலியார் அவர்களால் தேவாரம் இன்னிசைக் கருவிகளுடன் ஓதப்பட்டது. பின்னர் அக்கிராசனர் கட்டளைப்படி திருவாளர் V. ஆரிமுத்து முதலியார் " நமது கடமை " என்னும் விஷயத்தை வெகு தெளிவாக எடுத்துப் பேசினூர். திருவாளர் D. நரசிம்ம முதலியார் (எப்.ஏ., மாணவர்) அவர்கள் செல்வம் என்ற விஷயத்தை வெகு விமரிசையாகப் பேசினூர். அதே விஷயத்தை மேற்கண்ட V. ஆரிமுத்து முதலியார் பின்பற்றி பேசினூர். திருவாளர் சுந்திரமூர்த்தி முதலியார் அவர்கள் 'செங்குந்தரின் பண்டைய புகழும் தற்கால நிலையும்' என்ற விஷயத்தைப் பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினூர். பின்னர் அக்கிராசனர் முடிவுரை நிகழ்ந்த பிறகு இரவு 9 மணிக்கு அவைத் தலைவருக்கும் உபந்நியாசகர்களுக்கும் மற்றும் விஜயஞ்செய்திருந்த பெரியார்களுக்கும் வந்தனம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது நிறைவேறியது என ஷை சங்க காரியதரிசி எழுதுகிறூர்.

### கோயமுத்தூர் ஜில்லாவில் கிளர்ச்சி.

### ஊத்துக்குளி உண்மைச் செங்குந்தகுலசங்கம்

4-வது மீட்டிங். இச்சங்கம் திரு. மொ. ப. ரங்கசாமி முதலியார் அவர்கள் பாங்கியின முன்கட்டடத்தில திரு. மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் 10-6-28 இரவு 8-மணிக்குக் கூடியது.

மூன்றுவது மீட்டிங்கின் நடவடிக்கைகள் வாசித்துக் காட்டப்பட்டது. தலைக்கட்டு வரிவசூலிக்கப்பட்டது. பிறகு செங்குந்தமித்திரன் வைகாசி மீ இதழ் பத்திரிகையிலுள்ள முக்கியமான விஷயங்களைத் திருவாளர்கள் K. S, குப்பண்ணமுதலியாரும், மொ. க. குழந்தையப்ப முதலியார் அவர்களும் வாசித்துக் காட்டினூர்கள்.

ஒற்றுமை என்பதுபற்றி திரு. M. C. ராமசாமி முதலியார் சிறிது விளக்கிக் காட்டினார்:

சங்கத்தின் வரவு செலவு கணக்குகளைக் காரியதரிசி வாசித்துக்காட்ட எல்லோராலும் அங்கீகாரம் செய்யப்பட்ட பின்னர் அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

I. இச்சங்கம், தலைச்சங்கமானது சிறந்த ஊக்கத்துடன் நம்மவர்களில் முன்னேற்றத்துக்காக பல விதங்களிலும் பாடுபட்டு வருவதைப் பார்க்க மிகவும் களிப்பெய்துவதோடு, நம்மவர்கள் மகாநாட்டைக் கூடிய சீக்கிரம் (அதாவது ஒரு மாதத்திற்குள்ளாக) ஈரோட்டில் கூட்டத்தகுந்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளுமாறு தலைச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகின்றது.

II. பாவடி விஷயமாகச் சென்ற மீட்டிங்கில் பேசியபடி தாலூக்கா போர்டுகளுக்கு மனுச்செய்து கொள்ளத்தீர்மானிக்கிறது.

III. அடுத்த மீட்டிங்கில் கல்வி, ஒற்றுமை, திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரம் என்பன பற்றி முறையே திருவாளர்கள் M. C. இராமசாமி முதலியார், K. S. குப்பண முதலியார், M. C. பாலசுப்பிரமண்ய முதலியார் ஆகிய மூவரும் பேசுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

IV. இனிமேல் பிரதிமாதமும் பௌர்ணமிக்கு முந்திய வியாழக்கிழமை தினத்தன்று மீட்டிங் கூட்டுவதாகத் தீர்மானிக்கிறது.

பின்னர் இரவு 11-30 மணிக்குச் சபை இனிது நிறைவேறியது.

M. C. இராமசாமி முதலியார்,
காரியதரிசி, 11-6-28.

## செங்கல்பட்டு ஜில்லாவில் கிளர்ச்சி.

### தேவாதூர்.

1928-ஹு மே-மீ 28-உக்குச்சரியான தமிழ் விபவஹு வையாசிமீ 15உ கோர்ட்டு தேவாதூர் பெரியதனம் திரு. வேதாசலமுதலியார் அவர்கள் இல்லத்தில் இரவு 7-மணிக்குத் திரு. சிவலிங்கமுதலியார் அவர்கள், சென்னை தென்னிந்திய செங்குந்த மஹாஜன சங்கத்திற்குக் கிளைச்சங்கமாக நம் கிராமத்திற்கு ஒருசங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று கூட்டம் சேர்த்தனர்.

இவ்வூர்க்குச் செங்குந்த மஹாஜன சங்கமெனப் பெயர்வைக்கப்பட்டது.

மாதமாதம் நம்கிராமத்தில் ஏற்பட்டிருக்கும் பஜனைக் கூட்டத்தில கூட்டம் சேர வேண்டு மென்றும் நம் குல முன்னேற்றத்திற்காகவும் வழக்க ஒழுக்கம் கல்வி முதலியவற்றில் முன்னேற்ற முள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மற்ற விவரங்களை அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யவேண்டு மென்றும் சங்கங்கள் முதலியவற்றிற்கு நம்குலபிரமுகர்கள் செலவிற்குப் பணம் கொடுப்பதாக ஊரார் முன்னிலையில் தீர்மானிக்கப் பட்டது.

30-5-28-ல் மேலவலம்பேட்டை செங்குந்தர் அபிவிருத்தி சங்கக்காரியதரிசி திரு. சொ. சாம்பசிவ முதலியாரும், கி ந. சிங்காரவேலு முதலியார் அவர்களும் சென்னை தலைச் சங்கத்தார் உத்திரவுப்படியும் இக்கிராமவாசிகள் வேண்டுகோளின்படியும் மாலை 5 மணிக்குத் தேவாதூருக்கு வந்து சேர்ந்தனர்.

இரவு 9-மணிக்குப் பெரியதனம் வேதாசல முதலியார் அவர்கள் இல்லத்தில் கூட்டம் கூட்டப்பட்டது.

அச்சமயம் திரு. பெரியதனம் வேதாசலமுதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். அதுபோழ்து திரு. பொ. தருமலிங்க முதலியார் கடவுள் வணக்கம் பாடியபின் புலால் மறுத்தலைப் பற்றியும் மது பானங்களை ஒழிக்கவேண்டிய தென்றும் நீண்ட நேரம் உபன்னியாசம் செய்தனர்.

பிறகு சோ. சாம்பசிவமுதலியார் அவர்கள் இச்சங்கம நடக்கவேண்டிய முறைகளைப பற்றியும் இன்னின்ன வழியில் நடைபெறவேண்டுமெனறும் பேசினர். பிறகு சங்கத்து உத்தியோகஸ்தர் தேர்ந்தெடுக்கப்பட்டனா.

இவர்களிடம் வருடம் ஒன்றுக்கு ¾ ரூபாவீதம் மாதம் மாதம் வரும அமாவாசைதோறும் நபர் ஒன்றுக்கு 0-1-0 வீதம் செலுத்த வேண்டியதென்றும் இசசங்கத்தைச் சென்னைத் தென்னிந்திய மகாஜன சங்கத்திற்குச் கிளைச்சங்கமாகக சேர்க்கவேண்டுமென்றும,

தலைச்சங்கத்திற்கு வருடம் பிரதிவருடம் கட்டணமாக ரூபா 3-0-0 வீதம செலுத்த வேண்டியதென்றும்,

அதற்கு வே. ரூபா 3-0-0-ம் செங்குந்தமித்திரன் 1-க்கு 1 8-0-ம் ஆக ,4-8-0 நம்குலபிரமுகர்கள் கொடுக்கும்படி கிராம வாசிகள் ஒப்புக்கொணடனர்.

ஒரு கூட்டத்தில் 9 அங்கத்தினராவது கூட வேண்டுமென்றும இதில் சேர்ந்த அங்கத்தினர்முதல் உத்தியோகஸ்தர்வரை புலால் மறுத்தலையும் மது பானம் வகையறாவையும ஒழிக்கவேண்டு மென்றும் திரு. தருமலிங்க முதலியார பிரேரேபிக்க அதற்குச் சபையோர் ஒப்புக்கொணடார்கள். பிரதி அமாவாசை தோறும் நமமரபினர்கள் பாவு ஓடுதல் பாவு தோய்தல் தறி நெய்தல கூடாது. அன்று சங்கம கூட்டி நல்ல சத்விஷயங்களைப் பற்றியும் நம் குல முன்னேற்றத்தைப் பற்றியும் நூல்களை ஆராயச்சிசெய்ய வேண்டுமென்றும, சிறுசிறு வழக்குகளையும் நம்மரபினர் முன்னிலையிலேயே பஞ்சாயத்து மூலம தீர்த்துக்கொள்ளவேண்டு மெனறும், பிரதிமாதமும் ஒவ்வொரு அமாவாசையிலும் அங்கத்தினர்களில் ஒவ்வொரு மெம்பர்கள் சங்ககூட்டம் சேர்க்க வேண்டுமென்றும் சங்கபாரத்தை இன்றே பூர்த்தி செய்ய வேண்டியதென்றும, சட்டதிட்டங்கள் அந்த கூட்டத்திற்குள் காரியதரிசி பூர்த்தி செய்து ஆஜர் செய்யவேண்டியதென்றும், இவ்விஷயங்களைச் செங்குந்தமித்திரன், சுதேசமித்திரன் குடியரசு இரவிடன் முதலிய பத்திரிகை வாயிலாக வெளியிடும் படியும் தீர்மானிக்கப்பட்டது.



# பாமாலைப் பகுதி

## செங்குந்த மித்திரன் வாழ்த்துப் பாக்கள் : அன்னைப் பத்து

### கலிவிருத்தம்

#### விநாயகர்

ஆனைமு கத்துடை ஐந்துக ரத்தெந்
கோனைப்ப ணிகுவோம் அன்னே என்னும்
கோனைப்ப ணிகுவோம் செங்குந்த நேசன்சீர்
மேனுஞ்சென் னையோங்க அன்னே என்னும். (1)

#### கந்தக் கடவுள்

சிந்தைம கிழ்விக்குஞ் செங்குந்தன் வாழ்காம்
கந்தர்க்க ருதுவோம் அன்னே என்னும்
கந்தக்க ருதுவோம் கையைந்து டையார்க்கு
பிந்திப்பி றந்தவன் அன்னே என்னும் (2)

#### பரமசிவன்

முக்கட்ப ரமனை மூலனைப் போற்றுதும்
அக்கம ணிந்தவன் அன்னே என்னும்
அக்கம ணிந்தவன் அன்பாய் நம் மித்ரனை
மிக்கப்பு ரப்பவன் அன்னே என்னும். (3)

#### சத்தி

பத்திரிகைவாயி லாகப்ப யன்தரும்
மித்திரன் வாழ்கவே அன்னே என்னும்
மித்திரன் வாழ்கவே மேலாம னதுடன்
சத்திப்ப ணிகுவோம் அன்னே என்னும் (4)

#### திருமால்

வீரவேற் கையுடை விமலன்ச கோதரர்
தீரசெங் குந்தர்கள் அன்னே என்னும்
தீரசெங் குந்தர்கள் நேசன்சி றோங்கிட
நாரணன் போற்றுதும் அன்னே என்னும். (5)

#### இலக்குமி

செம்மரைப் போதினில் மேவுந்தி ருவாநம்
அம்மையைப் போற்றுதும் அன்னே என்னும்
அம்மையைப் போற்றுதும் அன்பாய்செங் குந்தனும்
செம்மையாய் வாழ்ந்திட அன்னே என்னும். (6)

#### சரஸ்வதி

செல்வனுஞ் செங்குந்த மித்திரன் சென்னையிற்
வல்லமை யாய்வாழ்க அன்னே என்னும்
வல்லமை யாய்வாழ்க வாணிசெஞ் சீரடி
பல்காலும் போற்றுதும் அன்னே என்னும் (7)

#### நால்வர்

அப்பன்சம் பந்தனு ரூரவா தவூரன்
செப்புமி வர்பதம் அன்னே என்னும்
செப்புமி வர்பதம் சேவிப்பம் மித்ரனை
தப்பின்றியே காக்க அன்னே என்னும். (8)

#### வீரவாகு

சிற்றம்ப லத்தவன் சேய்வழி வந்தவர்
பொற்புடன் வாழ்கவே அன்னே என்னும்
பொற்புடன் வாழ்கவே போதும் வீரவாகை
பற்றுடன் போற்றவே அன்னே என்னும் (9)

#### நவக்கிரகங்கள்

நன்மைநி மைநல்கும் நவக்கோள்க ளையின்று
அன்புடன போற்றுவோம் அன்னே என்னும்
அன்புடன் போற்றுவோம் ஆர்வமாய்ச் சென்னையில்
ஆனைமித் ரன்வாழ்க அன்னே என்னும் (10)

க. இரத்தின சபாபதி முதலியார்
அமைச்சர், செங்குந்த சைவசித்தாந்த சமாஜம்,
கண்டாச்சிபுரம்.

---

**பிழை திருத்தம்** :—பக்கம் ௱௫௪ : வரி 11 : "கட்டணமாக ரூ. 5" என வாசிக்கவும்.

**குறிப்பு** :—இம்மாதம் தாமதத்தால் அவசரமாகப் பத்திரிகையை வெளியிடவேண்டியதாக ஏற்பட்டதால் சில விஷயங்கள் விடுபட்டுப் பக்கங்கள் குறைவாக இருப்பதற்கு அன்பர்கள் மன்னிப்பார்களென நம்புகின்றோம். இக்காரணத்தாலேயே சங்கத்தின் மகமை வரவையும் வெளியிடாது நிறுத்திக்கொண்டோம்.—ப-ர்.

# செங்குந்த சீமான்களுக்கு இரண்டு விண்ணப்பங்கள்.

சென்னை, 1—5—28.

i. சேங்குந்த மாணவர் விடுதி.

பல இடங்களிலிருந்து வந்து சென்னையில் உயர்தரக்கல்வியை நாடும் நமது செங்குந்த மாணாக்கர்கள் தற்போது அவரவர்கள்கல்லூரிமாணவர் விடுதிகளிலோ (College Hostels) பிராமணர் சாப்பாட்டுஹோட்டல்களிலோ தங்கி, அபரிமிதமான பணத்தைச் சாப்பாட்டுக்கும் குடிக்கூலிக்கும் இதர சௌகரியங்களுக்கும் செலவழித்தும், தனித்த அக்கரையுள்ள மேற்பார்வையின்றிச் சுகமும் நலனும் வேண்டிய அளவு பெருமலிருக்கின்றனர். இக்குறையை நீக்க, நமது சங்கம் தனது ஆதரவில் திரு. ம. சண்முகசுந்தரமுதலியார், எம்.ஏ., எல்.டி., திரு. மா. பா. கந்தசாமி முதலியார், பி.ஏ., பி.இ., முதலிய அறிவாளிகளின் மேற்பார்வையோடுகூடிய ஒரு சேங்குந்த மாணவர் விடுதியை (Sengunṭha Students' Hostel) சென்னையில் ஏற்படுத்தி, அதில் சேரும் நமது மாணாக்கர்களுக்குக் கிரமமான செலவில் பல சௌகரியங்களையும் செய்துவைக்கத் தீர்மானித்திருக்கிறது.

இது சம்பந்தமான விவரங்களை அடுத்த பத்திரிகையில் வெளியிடுகின்றோம்.

அதற்குள்ளாக, நமது குலச்சீமான்களை, இம்முயற்சிக்கு வேண்டிய மூலப்பொருளுக்காகத் தம்மாலியன்ற நன்கொடையை எமது சங்கத்துக்கு அனுப்ப வேண்டுகின்றோம்.

செல்வத்துள் சீரிய செல்வமாம் கல்விச் செல்வத்தை நம்மவர் அடைவதற்காகச்செய்யப்படும் இச்சிறந்த தருமத்துக்கு நமது குலச்சீமான்கள் தாராள சிந்தையுடன் உதவிசெய்வார்களென்றே நம்புகின்றோம்.

சென்னை, 1—5—28.

ii ஏழைச் சேங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமும் தருமசாப்பாடும்

உயர்தரக்கல்வியை அவாவும்ஏழைச் செங்குந்த குல மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளித்து உண்டி உடை இருப்பிடம் முதலிய வசதிகள் தேடி வைப்பதைத் தனது பெருநோக்கங்களுள் ஒன்றாகக் கொண்டுளது நமது சங்கம். இவ்வருஷம் பல ஜில்லாக்களையும் சேர்ந்த பதினைந்து செங்குந்த மாணாக்கர்களுக்கு உபகாரச்சம்பளமளித்துவருகின்றது. அடுத்த வருஷமுதல் இன்னும் பலருக்கு உபகாரச் சம்பள மளிப்பதன்றிக் குறைந்த பக்ஷம் உயர்தரக் கல்வியை நாடும் இருபது மாணாக்கர்களுக்காயினும் சென்னையில் தருமசாப்பாடு போட்டுப் பாதுகாக்க உத்தேசித்திருக்கிறோம். இதற்கு மூலதனம் திரட்டுவது எமது கடமையாக இருக்கின்றது. திரண்ட மூலதனமின்றி எந்தத் தருமமும் நிலையாக நடைபெறுவது அரிதென்பது எவரும் உணர்ந்ததே. ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கென ஏற்படுத்த இருக்கும் இத்தருமத்தை நீடித்து நிலைக்கச் செயது நமது குலத்தின் முன்னேற்றத்தை நாடுவதில் செங்குந்த மகாஜனங்கள் எங்களுக்கு ஒத்தாசையாக இருக்கப் பின்வாங்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு, ஒவ்வொரு செங்குந்தரையும் தங்களாலியன்ற நன்கொடையை இதைக் கண்டவுடன் நமது சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,

தி. ஙா. சபாபதி முதலியார்,
ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க அமைச்சர்கள்.


80 வருஷ காலமாக சென்னையிலே சிறப்பு வாய்ந்த ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்று, தினசரி லெட்டர்களால் புகழ்பெற்று, அன்றாடம் நூற்றுக்கணக்கான பார்சல்களை சோல் ஏஜண்டுகள் தினந்தோறும் மெயிலில் பெற்று, ஜில்லா, தாலுக்கா, டவுன், கிராமம் முதலிய குக்கிராமங்களிலும் கொண்டாடி, அசல் சேப்ரோல் வாடை, அசல் பசும் நெய் மணம், குளிர்ந்த குணம், இன்புறும் காரம், பவுன் நிறம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப்பெற்று, நமது ஏஜண்டுகளுக்கு நற்கியாதி தந்து வியாபாரிகளுக்கு நற்பெயரளித்து உபயோகப்படுத்திய கனவான்களுக்கு மனோபீஷ்டம் தந்து இந்தியாவில் ஏராளமாக செலவாகி வருவது எது? எங்கள் அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே. இனிமேலாவது ஏமாந்து போகாமல் எங்கள் அசல் ஷண்முகம் பொடியை வாங்கி உபயோகப்படுத்தி இன்புறுங்கள்.

80-வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது.



அநேக
மேடல்கள்
நற்சாட்சி
பத்திரங்கள்
பெற்றது.

ஷண்முகம்

பட்டணம்பொடி

ஷண்முகம் மூக்குத்தூள் கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

முதல் தரமானது

பார்சல் தபால் சார்ஜு

| பலம் | கிரயம் ரூ.அ.பை. | தபால் சார்ஜு ரூ.அ.பை. | பாக்கிங் ரூ.அ.பை. | மொத்தம் ரூ.அ.பை. |
|---|---|---|---|---|
| 8 | 1 0 0 | 0 5 0 | 0 1 0 | 1 6 0 |
| 20 | 1 12 0 | 0 8 0 | 0 2 0 | 2 6 0 |
| 40 | 3 8 0 | 0 14 0 | 0 3 0 | 4 9 0 |

2-வது தரமானது வீசை 1-க்கு ரூ. 3. ஸ்பெஷல் சரக்கு வீசை 1-க்கு ரூ. 4.

பாக்கிங் சார்ஜுஞ் தபால் கூலியும் பிரத்தியேகமானது.



விநோத கதாமஞ்சரி, வெளிவந்து விட்டது!

## மாப்பிள்ளை மருமகளாதல்

நூலாசிரியர்: பண்டித கதாரத்ன
சே கிருஷ்ணசாமி சர்மா.

தமிழ்நாடு வெகு நாட்களாய் எதிர்பார்த்திருந்த அரிய புத்தகம் இதுவே. இது நாவல் அல்ல. புராணமல்ல. வேதாந்தமல்ல. காவ்யமல்ல. பிரபந்தமல்ல. இது ஒரு விநோத கதா களஞ்சியம். புத்தகத்தைப் படிக்கத் துடங்கியது முதல் முடியும்வரையில் மனதின் உற்சாகம் மிதமற்றிருக்கும். அநேக தடவைகள் படித்தாலும் ஆவல் தீராது. ஆண் பெண் அனைவரு மறியத்தக்க விஷயங்கள் அநேகமிருக்கின்றன. தமிழ்மக்கள் இதுவரை இவ்வித புத்தகம் படித்திருக்க மாட்டார். சில காபிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரப்பராகிதம் ரூ. 1—0—0
கிளேஸ் காலிகோ ரூ. 1—8—0

ஜி. எஸ். சாஸ்திரி அண்டு கோ.
தபால்பெட்டி நெ. 110, சென்னை.



## விளம்பரம்.

'ஆரம்பாசிரியன்,' 'செங்குந்த மித்திரன்' பத்திரிகாசிரியர்

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., இயற்றிய தமிழ் நூல்கள்.

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| 1. | சிறுவர்க்கான சிறு கதைகள்: முதற்புத்தகம் ... | 0 3 0 |
| 2. | ,, இரண்டாம் புத்தகம் ... | 0 3 0 |
| 3. | சிறு போறி பெருந்தீ ... | 0 4 0 |
| 4. | போறமைப் பேய் ... | 0 4 0 |
| 5. | செய்யுட் கதைகள் ... | 0 12 0 |

முதல் நான்கும் வெகு இனிமையாய் மிகவும் எளிய நடையில் பிரைமெரி பாடசாலைகளில் கதா வாசகங்களாக உதவுமாறு எழுதப் பெற்றவை. ஐந்தாவது மேல் வகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக உதவும். இவை உபாத்தியாயர்களுக்கு நூற்றுக்கு இருபது தள்ளிக் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம்:

டீசர்ஸ் பப்ளிஷிங் ஹௌஸ்,
200, [illegible]

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

ஸ்ரீ ஸ்ரீ கா. ச. ஸ்வாமிநாத தேசிகரால் கணிக்கப்பட்டது.

விபவஹ ஆனி, ஆடிமீ (1928ஹ ஜூலைமீ)

உத்தராயணம், தக்ஷிணாயணம், வசந்தருது, கிரீஷ்மருது, கலி-5030, சாலி-1851, பசலி-1337-38, பிரபவ 2.

| ஜூலை தே. | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | [illegible] | யோகினி. | விரதாதிகள் முதலிய சுபதினங்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 18 | ஞா | சது, 60 | சே 36-35 | ம, 36-35 அ | 2 | 1 | சது | தெ-மே | குரு அங் / ராகு / புத |
| 2 | 19 | திங் | சது, 210 | மூ 42-25 | சி, 42-25 ம | 2 | 1 | பௌ | தெ-மே | சூரி சுக் |
| 3 | 20 | செவ் | பௌ 6-10 | பூரா 47-10 | சி, 47-10 அ | 2 | 1 | பிர | தெற் | |
| 4 | 21 | புத | பிர, 8-53 | உத் 50-55 | அ, 50-55 சி | 2 | 1 | துதி | மேற் | 14 ரிஷ். அ |
| 5 | 22 | வியா | துதி, 10-38 | திரு 53-23 | சி, 60 | 2 | 1 | திரிதி | வ-மே | 16 கட-பு |
| 6 | 23 | வெ | திரி, 10-55 | அவி 54-45 | சி, 60 | 2 | 1 | சது | வ-கி | 21 சிம்ம-சு |
| 7 | 24 | சனி | சது, 10-10 | சத 55-5 | அ, 55-5 ம | 2 | 1 | பஞ் | ஆகா | |
| 8 | 25 | ஞா | பஞ், 8-23 | பூ 51-25 | சி, 54-25 அ | 2 | 0 | சஷ் | பூமி | சனி |
| 9 | 26 | திங் | சஷ். 5-33 | உத் 52-15 | சி, 60 | 2 | ½ | சப் | கிழ | கேது |
| 10 | 27 | செவ் | சப். 1-48 அஷ். 57-15 | ரே 50-8 | சி, 60 | 1 | ½ | அஷ் | வட | ஏ கலிச்சாம நாயனர் |
| 11 | 28 | புத | நவ, 51-48 | அசு 46-40 | ம, 46-40 சி | 1 | ½ | நவ | தெ-மே | சுபம் விளக்க |
| 12 | 29 | வியா | தச, 45-30 | பர 42-30 | சி, 42-30 ம | 1 | ½ | தச | தெற் | அப்பு வைக்க |
| 13 | 30 | வெ | ஏகா, 38-45 | கி 37-45 | சி, 37-45 ம | 1 | ½ | ஏகா | தெ-மே | கிருத்திகை |
| 14 | 31 | சனி | துவா, 31-38 | ரோ 32-35 | சி 60 | 0 | ½ | துவா | வ-மே | பிரதோஷம் |
| 15 | 32 | ஞா | திர, 24-18 | மிரு 27-23 | சி, 60 | 0 | ½ | சூன் | வ-கி | கடக ரவி, நா 29-20 |
| 16 | 1 | திங் | சது, ● 17-10 | திரு 22-15 | சி, 22-15 அ | 0 | 0 | சூன் | ஆகா | அமாவாசை |
| 17 | 2 | செவ் | அமா, 10-28 | புன 7-40 | சி, 60 | 0 | 0 | பிர | பூமி | கரிநாள் 6-க்கு மழை |
| 18 | 3 | புத | பிர. 4-48 | பூச 14-88 | சி, 60 | 0 | 0 | துதி | கிழ | சிராவண சுத்தம் |
| 19 | 4 | வியா | துதி. 0-18 திரி, 57-8 | ஆயி 11-35 | சி, 11-35 அ | 0 | 0 | திரி | வட | நவ கிரக சாந்தி |
| 20 | 5 | வெ | சது, 55-50 | மக 10-4 | ம, 10-45, சி | 0 | ½ | சது | தெ-மே | ஆடி பூரம் |
| 21 | 6 | சனி | பஞ். 56-25 | பூர 11-45 | சி, 11-45 ம | 0 | ½ | பஞ் | தெற் | மாங்கல்யம் |
| 22 | 7 | ஞா | சஷ். 58-5 | உத் 14-35 | அமு, 60 | 1 | ½ | சஷ் | மேற் | வித்தியாரம்பம் |
| 23 | 8 | திங் | சப், 60 | அஸ் 19-10 | சி, 19-10 பி | 1 | ½ | சப் | வ-மே | பெ. குறும்ப நாயனர் |
| 24 | 9 | செவ் | சப், 3-5 | சித் 25-20 | சி, 60 | 1 | ½ | அஷ் | வ-மே | வியாதியஸ்தர் குளிக்க |
| 25 | 10 | புத | அஷ், 8-25 | சுவா 32-39 | சி, 60 | 1 | ½ | நவ | வ-கி | சுந்தரமூர்த்தி, சேரமான் |
| 26 | 11 | வியா | நவ, 12-8 | விசா 40-15 | சி, 60 | 2 | ½ | தச | ஆகா | சுபம் விலக்க |
| 27 | 12 | வெ | தச, 20-45 | அ 47-50 | சி, 47-50 ம | 2 | 0 | ... | பூமி | விதை விதைக்க |
| 28 | 13 | சனி | ஏகா, 26-40 | கே 54-40 | சி, 60 | 2 | 1 | ஏகா | கிழ | கலியர், கோட்புலி |
| 29 | 14 | ஞா | துவா, 31-28 | மூ 60 | அமு, 60 | 2 | 1 | துவா | வட | திருநிமஸ் பிருக் |
| 30 | 15 | திங் | திர, 35-7 | மூ 0 30 | சி, 0-30 ம | 2 | 1 | திர | தெ-கி | காரி நாயனர் |
| 31 | 16 | செவ் | சது, 35-55 | பூரா 4-58 | சி, 4-58 அ | 2 | 1 | சது | தெ-மே | கடன் தீர்க்க |

ஆனி மீ 19உ மன்னார்குடி தெப்பம், 21உ திருவண்ணாமலை உற்சவம், 29உ திருக்கழுக்குன்றம், திருநெல்வேலி, திருவாரூர் முதலிய ஸ்தலங்களில் ஆடி பூர உற்சவ ஆரம்பம், ஆடிமீ 4உ மதுரை மூலைகோட்டு உச்சவம், 6உ திருக்கழுக்குன்றம் ஆடி பூர தீர்த்தவாரி, ஆனி மீ 32உ கடக-ரவி-நாழிகை 29-20—தக்ஷிணாயன புண்யகாலம், நாழிகை 21-47—தர்ப்பணாதிகள் செய்வது உத்தமம், ஆடிமீ 2உ மழை பெய்யும்.

## 'செங்குந்தமித்திரன்' புத்தகசாலை

**நல்ல புத்தகங்கள்!** **நம்பிக்கையான விலைகள்!**

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி வ. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனகதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள், வைதிகநூல்கள் பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமானபதிப்புகள் அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பின் கால்பாகத்தை முன்பணமாக மணியாடர் செய்தனுப்புக. மிகுதியிற்கும் ரூபாயைத் தபால் பாகிங் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்தமாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமான சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்ப வேண்டிக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,

மானேஜர் :—'செங்குந்தமித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு.

### சந்தாநேயர்களுக்கு அறிக்கை.

(1) சென்றமாதம் அறிவித்தபடி வி. பி. தபாலில் பத்திரிகையை அனுப்பிப் பழைய பாக்கியையும் புது வருஷத்திய சந்தாவையும் வசூலிப்பதால் சந்தாநேயர்களுக்கு அநாவசியமாக மூன்றணா கஷ்டமேற்படுமென நினைத்து இம்மாதத்திய சஞ்சிகையையும் அநேகமாக முன்பணம் பெற்றுக்கொள்ளாமலேயே அனுப்புகிறோம். பத்திரிகையைப் பெற்றுக்கொண்டவுடன் அன்பர்கள் பாக்கித் தொகையையும் புதுச் சந்தாவையும் மணியாடர் செய்துவிட வேண்டப் பெறுகின்றனர். அப்படி மணியாடர் செய்யாத அன்பர்களுக்கு அடுத்த மாதத்திய பத்திரிகையை வி.பி. யில் அனுப்புவோம. பத்திரிகையைப் புது வருஷத்திற்கு வாங்க விரும்பாதவர்கள் பழைய பாக்கியாகிய ரூபாய் ஒன்றரையை மணியாடரில் அனுப்பிவிட்டுத் தமது விருப்பத்தை உடனே தெரிவித்துவிடுவாராக.

(2) சென்ற டிசம்பர் 20-தேதிக்கு அப்பால் பணம் அனுப்பிய சந்தா நேயர்களின் பெயர்கள் இம்மாதப் பத்திரிகையில் இடமில்லாததால் அடுத்த மாதம் வெளியிடப் பெறும்.

(3) நமது பத்திரிகை ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் நான்காம் தேதி தொடங்கி ஐந்து நாளில் தபாலில் போடப்படும். இதில் தவறுதலேனும் தவக்கமேனும் நேராது. எந்தச் சஞ்சிகையாவது யாருக்காவது எம்மாதமேனும் கிடைக்காமலிருந்தால் அவர் தபால் அதிகாரிகளுக்கு மனு எழுதவேண்டும்.

### விளம்பர விகிதங்கள்.

'செங்குந்த மித்திர'னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன் பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும் :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம் |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 60 | 30 | 16 | 6 |
| ½ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |
| ¼ பக்கம் | ,, | 24 | 12 | 6½ | 2½ |

இங்ஙனம்:

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,
31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

“ செங்குந்த மித்திரன் ”

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்றமடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சீரிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் ‘ செங்குந்த மித்திர ’ னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது ‘ மித்திர ’ னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ. பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினாங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

“ செங்குந்தர் பிரபந்தத் திரட்டு ”

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இதனுள் கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய ‘ ஈட்டி எழுபது ’ ‘ எழுப்பெழுபது ’ இவ்விரண்டும், புகழேந்திப்புலவர் செய்தருளிய ‘ திருக்கை வழக்கமும் ’ மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய 12 பிரபந்தங்களும் அடங்கும்.

‘ ஈட்டியெழுபது ’ கச்சிப் பிர்தாபனார் செய்தருளிய பேருரையுடன் கூடியது. இவ்வுரை செங்குந்தரது வழக்கம், ஒழுக்கம், அறிவு, ஆற்றல், கொடை முதலானவற்றை மிகச் செவ்வையாக எளிய நடையில் விளக்குவது.

இந்நூற்றொகுதி, தமிழாசிரியர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதிய முன்னுரையும், தமிழாசிரியர் ஸ்ரீ மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சி யுரையும், கல்வெட்டாராய்ச்சியினர் ஸ்ரீமத் சுப்பிரமணிய தேசிகனார் எழுதிய அரிய கல்வெட்டுரையும், மற்றும் பல நல்லிசைப் புலவர்களின் மதிப்புரைகளும், ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பல ஆராய்ச்சிக் குறிப்புக்களைக் கொண்டு எழுதிய பதிப்புரையும் கொண்டது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

| | | |
|---|---|---|
| உயர்ந்த பதிப்பு காலிகோபயிண்டில் பொன் கிலிட் செய்தது விலை ரூ. | 3-0-0 | தபாற் கூலி அ. 8 |
| ‘ செங்குந்த மித்திரன் ’ சந்தா நேயர்களுக்கு மட்டும் ,, ,, | 2-8-0 | பிரத்தியேகம். |

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் சட்டதிட்டங்கள் விலை அணா 2.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,
நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

This Journal is published by T. N. Satapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 2/19-A, Armenian Street, Madras.

12480